வாராந்த சஞ்சிகை
# சுடர் ஒளி
பெப்ரவரி 04-10 2015
பக்கம் 24
விலை 30/-



# கம்பஸ்காரருக்கு கடிதமொன்டு....!




1717 FOLLOW US www.mobitel.lk
மொபிடெல் mTicketing சேவை
365 நாட்களும் 365 இனை அழைத்து
புகையிரத பயணச் சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள்
ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
Sri Lanka Railways
Sri Lanka Telecom
Mobitel
TRC/EA/ADT/Mobitel/13-20
*நிபந்தனைகளுக்குட்பட்டவை.



அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் மூன்றாவது வீரராக களமிறங்கும் இந்திய அணியின் விராத் கோலியை அணியின் நலன் கருதி நான்காவது வீரராகக் களமிறக்கியமை தற்போது விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளது. ஒவ்வொரு வீரரும் எத்தகைய வரிசையிலும் விளையாடுவதற்கு தயாராக இருப்பது அவசியம் என்றாலும் குறிப்பிட்ட சில வீரர்கள் குறிப்பிட்ட ஒரு வரிசையிலே நன்றாகப் பிரகாசித்து அந்த இடத்தினையே தங்களது வாலாயமான இடமாக மாற்றிக் கொள்வார்கள். அந்த வகையில் விராத் கோலி ஒருநாள் போட்டிகளில் மூன்றாவது வீரராக களமிறங்கியே பெருமளவு ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

வரிசை மாற்றம் குறித்து டோனி கூறுகையில் 'ஜடேஜா காயமடைந்த காரணத்தினால் தற்போது மத்திய வரிசைத் துடுப்பாட்டத்தினை பலப்படுத்தும் நோக்கிலேயே கோலி நான்காவது வீரராக களமிறக்கப்படுகின்றார் எனவும் ஒரு பக்கத்தில் விக்கெட் சரிந்தாலும் மறுபக்கத்தில் கோலி தனியாக நின்று போட்டியை வென்று கொடுப்பார்' என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

# ஏன் இந்த மாற்றம்?

- சி.விமலன்

ஆனால் இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலிய அணிகளுடனான முதற் சுற்று ஆட்டத்தில் நான்காம் இடத்தில் வந்த கோலி இரட்டை இலக்கங்களைக் கூடத் தாண்டவில்லை. கிரிக்கெட்டைப் பொறுத்த வரையில் One Man Army என்பது ஒரு சில போட்டிகளில் சாத்தியப் பட்டாலும் எல்லாப் போட்டிகளிலும் அவ்வாறு எதிர்பார்க்க முடியாது.

இதில் என்ன ஆச்சரியம் என்றால் அவுஸ்ரேலியாவுடன் நடந்த மூன்றாவது போட்டியில் ஜடேஜா விளையாடிய போதிலும் கோலி நான்காவது வீரராகவே களமிறக்கப்பட்டமை டோனி கூறிய கருத்தை கேள்விக்குள்ளாக்கி உள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளில் மத்திய வரிசையைப் பலப்படுத்துவது ஆரோக்கியமான முடிவு தான் என்றாலும் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான காலம் கடந்துவிட்டது என்றே தோன்றுகின்றது. உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில் இவ்வாறான இறுதிக்கட்ட பரிசோதனை முயற்சிகள் அணியின் சமநிலையில் குழப்பத்தையே உண்டு பண்ணும்.

இதற்குச் சிறந்த உதாரணம் 2007ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் அன்றைய இந்திய அணியின் பயிற்சியாளராக விளங்கிய கிறேக் சப்பல் தனது பரிசோதனை முயற்சிகளை உலகக் கிண்ணம் வரை பரிசோதித்ததன் விளைவாக இந்திய அணி முதற்சுற்றுடனேயே வெளியேறி இருந்ததைச் சுட்டிக்காட்டலாம்.

இதிலிருந்து பரிசோதனை முயற்சிகளைச் செய்து பார்ப்பதற்கான இடமல்ல உலகக் கிண்ணப் போட்டிகள் என்பது புலனாகின்றது. உண்மையில் உல்கக் கிண்ணத்தைக் கருத்தில் கொண்டு வரிசை மாற்றத்தை ஏற்படுத்த விரும்பி இருந்தால் இவ்வாறான பரிசோதனை முயற்சிகளை சிறிது காலத்துக்கு முன்னதாகவே ஆரம்பித்திருக்க வேண்டும். அப்பேரது தான் அதன் பெறுபேறுகளை அவதானித்து அந்த அனுபவத்தின் வழியாக உலகக் கிண்ணப் போட்டிகளில் அதனை அனுமதிக்கலாமா இல்லையா என்றொரு முடிவு கிடைத்திருக்கும்.

குறிப்பாக சென்ற வருடம் இங்கிலாந்துக்குச் சென்ற இந்திய அணி அங்கு படுதோல்வி அடைந்திருந்தது. அதற்கு விராத்கோலி பிரகாசிக்காததும் முக்கிய காரணமாக இருந்தது. வீரர்கள் ஆட்டத்திறன் இழந்து தவிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களின் வரிசையை மாற்றி விளையாட வைப்பதும் கிரிக்கெட்டில் ஒரு உத்தியாகும். இங்கிலாந்தில் அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கோலிக்கு ஏற்பட்டிருந்த போதிலும் வரிசை மாற்ற முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஒரு அணியின் தலைவரும் பயிற்சியாளரும் கலந்தாலோசித்து ஒரு வீரரிடமிருந்து உச்சபட்சத் திறமையை எவ்வாறு வெளிக் கொணரலாம் என்பதிலேயே அவர்களின் புத்திசாதுர் யம் காணப்படுகின்றது. கங்குலி இந்திய அணியின் தலைவராக விளங்கிய காலப்பகுதியில் அணியின் நலன் கருதி என்ற போர்வையில் டெண்டுல்கரை ஓரங்கட்டும் முயற்சியில் நான்காவது வீரராக சில தொடர்களில் களமிறக்கிய போதிலும் டெண்டுல்கரினால் அந்த இடத்தில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக ஜொலித்ததைப் போன்று பிரகாசிக்க முடியவில்லை.





ஆனாலும் உலகக் கிண்ணம் போன்ற பெருந்தொடர்களில் டெண்டுல்கரின் ஒத்துழைப்பின்றி கிண்ணம் வெல்வது சாத்தியப்படாது என்பதை உணர்ந்த கங்குலி 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் மீண்டும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக டெண்டுல்கரை களமிறக்கியதனால் இறுதிப் போட்டிவரை இந்தியா முன்னேறியதுடன் டெண்டுல்கரும் 673 ஓட்டங்களை அத்தொடரில் குவித்து தொடர் நாயன் விருதையும் தட்டிச் சென்றார். இது கங்குலியின் சாதுர்யமான தலைமைத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு. தற்போதைய இந்திய அணி அந்த வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்கவில்லை என்றே தோன்றுகின்றது. ஒவ்வொரு அணித் தலைவரும் ஒரே மாதிரியான அணுகுமுறையைப் பின்பற்றுவதில்லை என்றாலும் தலைமைத்துவத்தில் தனித்துவத்தைப் பேணும் அணித்தலைவர்கள் வீரர்களின் மனோநிலையை புரிந்து கொள்வது தவிர்க்க முடியாதது.



வீரர்களின் ஆட்டத்திறன் உச்சத்தில் இருக்கின்ற பொழுது அவர்களுக்கு வாலாயமான வரிசையில் ஆடவிட்டாலே ஓட்டங்களை குவிப்பதற்கு வசதியாக இருக்கும். அந்தத் தருணத்தில் அவர்களின் வரிசையை மாற்றி விட்டு ஆட்டத்திறன் இழந்த சந்தர்ப்பத்தில் வழமையான வரிசையில் ஆடவிடுவதில் எந்தவிதமான நன்மைகளும் ஏற்படப் போவதில்லை. அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் நான்கு சதங்களை அடித்து உச்சபட்ச ஆட்டத்திறனில் விளங்கும் கோலிக்கு இந்தவரிசை மாற்றம் மனதளவில் ஏமாற்றத்தை அளித்திருக்கும்.

டெஸ்ட் போட்டிகளில் இருந்து டோனி திடீரென ஓய்வு முடிவை அறிவித்தமைக்கு கோலி ரவிசாஸ்திரி கூட்டணி அளித்த நெருக்கடியே காரணம் என வெளிவந்த செய்தியையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் நான்காவது வீரராக கோலியை டோனி களமிறக்கியதையும் சந்தேகக் கண்கொண்டு தொடர்பு படுத்திப் பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை.

கோலியின் வரிசை மாற்றம் குறித்து விவியன் றிச்சர்ட்ஸ் மற்றும் இயன் சப்பல் மாறுபட்ட கருத்துக்களை கூறியுள்ளார்கள். நான்காவது வீரராக கோலி விளையாடுவது சரியென றிச்சட்சும் மூன்றாவது வீரராகவே கோலி களமிறங்க வேண்டும் என சப்பலும் தெரிவித்துள்ளனர்.

உலகக் கிண்ண அணித் தெரிவின் பொழுது ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக முரளி விஜயை அணியில் சேர்க்குமாறு டோனி பரிந்துரை செய்தபோதிலும் அதனை இந்திய அணியின் தேர்வுக்குழுவினர் நிராகரித்திருந்தனர். பந்துவீச்சுப் பலவீனத்தை உடைய இந்திய அணி எதிரணியை தனது பலமான துடுப்பாட்ட வரிசையின் மூலமாகவே மிரட்ட வேண்டியுள்ள நிலையில் ஷிகர் தவானின் மோசமான ஆட்டம், றோகித் சர்மாவுக்கு ஏற்பட்டுள்ள உபாதை, ஜடேஜா பூரண உடற்தகுதி பெறாமை போன்ற நெருக்கடிகள் இந்திய அணிக்கு அதிகரித்து வருகின்ற நிலையில் உலகக் கிண்ணத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றால் கோலியின் வரிசை மாற்றம் தொடர்பான தனது முடிவை ஆடுகளத்தின் தன்மை மற்றும் போட்டியின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப டோனி மறுபரிசீலனை செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகவே தற்போது தோன்றுகின்றது.

- ஆசாத்



# இறக்காது நீதி

**ஒரு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடுநிலை நின்று நீதியை நிலை நாட்டுபவர்கள் என்ற வகையில் அத்தகைய உயர்ந்த கௌரவம் நீதிபதிகளுக்கு வழங்கப்படுவதுண்டு. ஒரு நீதிமன்றத் தீர்ப்பைக் கூட இன்னொரு உயர்நீதிமன்றம் மட்டுமே விமர்சிக்கவோ மாற்றவோ முடியும். ஒரு நீதியரசரின் தீர்ப்பை ஒரு தனிநபரோ, ஒரு நிறுவனமோ விமர்சிப்பது கூட சட்டப்படி குற்றமாகும்.**

ஒரு நீதிபதி வாகனத்தில் வீதியால் வரும் போது கடமையில் நிற்கும் பொலிஸார் "சல்யூட்" அடித்து நீதிபதிக்கு மரியாதை செலுத்துவார்கள். இது பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரை பின்பற்றப்பட்டு வரும் மரபு.

ஒரு நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடுநிலை நின்று நீதியை நிலை நாட்டுபவர்கள் என்ற வகையில் அத்தகைய உயர்ந்த கௌரவம் நீதிபதிகளுக்கு வழங்கப்படுவதுண்டு. ஒரு நீதிமன்றத் தீர்ப்பைக் கூட இன்னொரு உயர்நீதிமன்றம் மட்டுமே விமர்சிக்கவோ மாற்றவோ முடியும். ஒரு நீதியரசரின் தீர்ப்பை ஒரு தனிநபரோ, ஒரு நிறுவனமோ விமர்சிப்பது கூட சட்டப்படி குற்றமாகும்.

சர்வதேச அளவிலேயே இப்படியான ஒரு உயர்ந்த ஸ்தானம் நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் இத்தகைய உயரிய கௌரவத்தை முன்னைய அரசாங்கமும், பிரதம நீதியரசராக இருந்த மொஹான் பீரிஸும் களங்கப்படுத்தி விட்டனரோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அண்மையில் மத்திய மாகாணசபை உறுப்பினர் அசாத் அலி தனது வீட்டுக்குச் சென்றும், தொலைபேசி மூலமும் அவரைப் பதவி விலகும் படி மிரட்டினார் என முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அவர்களும் பிரதம நீதியரசரின் தொலைபேசியையும் அசாத் அலியின் தொலைபேசியையும் ஆய்வு செய்வதாகத் தெரிவித்துள்ளனர். தன்னை வீதியில் கண்டாலே சல்யூட் அடித்தும், நீதிமன்றுக்கு செல்லும் போது எழுந்து மரியாதை செலுத்தும் பொலிஸாரிடம் பிரதம நீதியரசரே நேரில் சென்று முறைப்பாடு செய்தார் என்பது ஒரு வியப்பான விடயம் தான். பொலிஸாருக்கு நீதிபதி கட்டளையிடுவது தான் வழமையான நடைமுறை. ஆனால் பொலிஸாரிடம் முறைப்பாட்டை நீதிபதி ஒருவர் மேற்கொள்வது என்பது நாம் முன் எப்போதும் கேள்விப்படாத விடயம் தான்.

அடுத்த வியப்பு என்னவென்றால் பொலிஸார் பிரதம நீதியரசரின் தொலைபேசி உரையாடல்களையே ஆய்வு செய்கின்றாராம். ஒரு நாட்டின் பிரதம நீதியரசரின் உரையாடல்களைப் பிறர் எவரும் கேட்பது ஒரு ஜீரணிக்கத்தக்க விடயமாகத் தெரியவில்லை.

எவருமே கேள்வி எழுப்ப முடியாத கௌரவத்துக்குரிய பதவியான பிரதம நீதியரசர் பதவி ஏன் மொஹான் பீரிஸால் மதிப்பிறக்கம் செய்யப்படுகின்றது என்ற கேள்வி சட்ட வல்லுநர்கள் மத்தியில் மட்டுமன்றி சாதாரண மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

ஆனால் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் நிகழ்வுகள் இந்தச்சம்பவத்தால் ஏற்படுத்தக் கூடிய ஆச்சரியத்தின் வீரியத்தைக் குறைக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

ஒரு நீதிமன்றில் நீதிபதி உள்ளே வரும் போது சட்டத்தரணிகள் உட்பட அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்துவார்கள். அது மட்டுமன்றி சட்டத்தரணிகள் தம் உரையை ஆரம்பிக்கும் போது கூட 'மைலோர்ட்' என்ற அதி உயர் கௌரவம் கொடுத்தே தொடங்குவார்கள். சட்டத்தரணிகள் எவ்வளவு தான் திறமையுடன் வாதிட்டாலும் இறுதியில் நீதிபதியின் தீர்ப்பே முடிவானதாக அமையும்.

அதாவது நீதியரசர் என்பவர் கேள்விகளுக்கு உட்பட முடியாத சட்டத்தரணிகளின் உயரிய கௌரவத்துக்கான பதவியை வகிப்பவர்.

ஆனால் இலங்கையில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் பதவி விலக வேண்டும் எனக் கோரி சட்டத்தரணிகள் போராட்டம் நடத்திய நிலை ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் தனது பணியகத்துக்கு வருவதையே தவிர்த்துக் கொண்டார். அதன் பின்னர் சட்டத்தரணிகளும் சிவில் சமூகத்தினரும் இணைந்து பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தி, ஷிராணியை மீண்டும் பிரதம நீதியரசராக வரவேற்றனர்.

இவ்வாறான எதிர்ப்புக்கள் இடம் பெற்ற போதிலும் மொஹான் பீரிஸ் தானாகப் பதவி விலகிக் கொள்ளவில்லை.

இது பிரதம நீதியரசர் என்ற பதவிக்கே ஏற்படுத்தப்பட்ட ஒரு பெரும் அவமானம் என்றே சட்டம் சார் சமூகத்தினர் கருது கின்றனர். சட்டத்துறை சார்ந்தோர் ஒருமுகமாக அவரைப் பதவி விலகும் படி கோரிய போதும் அந்த அவமானத்தைக்யும் கூடப்பொருட்படுத்தாமல் பதவியில் ஒட்டியிருக்கவே விரும்பினார். கௌரவமாகப் பதவியை விட்டு விலகினார் என்ற நல்லெண்ணத்தைப் பெற மொஹான் பீரிஸ் தவறி விட்டார்.

இறுதியில் மொஹான் பீரிஸின் நியமனம் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டது எனக் காரணம் காட்டப்பட்டு இவரது நியமனம் ரத்துச் செய்யப்பட்டது. இதன் மூலம் மொஹான் பீரிஸ் உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.


அதே வேளையில் திருமதி. ஷிராணி பண்டாரநாயக்காவைப் பதவி நீக்கியது சட்ட விரோதமானது எனக் கூறப்பட்டு அவர் மீண்டும் பிரதம நீதியரசர் பதவியிலமர்த்தப்பட்டார். அவர் ஒரு நாள் மட்டும் பதவியில் அமர்ந்து விட்டு தனக்கே உரிய கௌரவத்துடன் ஓய்வு பெற்று விட்டார்.

ஆனால் மொஹான் பீரிஸ் தன்னைத் தானே அவமானப்படுத்திக் கொண்டதுடன் பிரதம நீதியரசர் பதவியையும் அவர் தான் பதவி வகித்த காலத்தில் அகௌரவப்படுத்தி விட்டார் என்பதே சட்ட வல்லுநர்கள் முன் வைக்கும் குற்றச்சாட்டாகும்.

மொஹான் பீரிஸ் சட்டமா அதிபராக இருந்த நாள்களில் கூட சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் நியாயமான முறையில் இருக்க வில்லை என்னொரு குற்றச்சாட்டு உண்டு. முன்னாள் ஜனாதிபதி ஆலோசகராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக் ஷ்மன் பிரேமச்சந்திரன் கொலை, மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா ஒரு உல்லாச விடுதியில் வைத்து படை அதிகாரியைப் தாக்கிய சம்பவம். பாஷன் கோனர் நிறுவனம் தாக்கப்பட்டு எரியூட்டப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் ஒரு பக்கச் சார்பாக எதிரிகளுக்குச் சாதகமாகவே நடந்தனர் என்ற குற்றச்சாட்டு அந்த நாளகளில் நினைவிருக்கலாம்.

நீதிச்சேவையை அகௌரவப்படுத்துவதிலும், நம்பிக்கையிழக்க வைக்கும் வகையிலும் மொஹான் பீரிஸ் செயற்பட்டுள்ளார் என்ற கருத்து பரவலாகவே நிலவி வருகிறது. அதற்கு அவரை மட்டும் பொறுப்புச் சுமத்தி விட முடியாது. அவரின் பின்னால் நின்று அவரை இயக்கியவர்கள் சட்டத்தை தங்கள் கையில் எடுத்து வைத்து அட்டகாசம் போட்டமையை மறந்து விட முடியும்.

எப்படி இருப்பினும் சில சமயங்களில் நீதி உறங்க வேண்டிய நிலை ஏற்படுவதுண்டு. ஆனால் அது என்றுமே இறந்து போய் விடுவதில்லை.






அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் இந்தியப் பயணம் சீனாவை உலுப்பியுள்ளது. உலகில் அதிக மக்கள் தொகை, துரித வளர்ச்சியடையும் பொருளாதாரம், உலகில் இரண்டாவது (சில கணிப்பீடுகளின் படி முதலாவது) பெரிய பொருளாதாரம், உறுதியான அரசு, உலகிலேயே அதிக அளவு வெளிநாட்டுச் செலாவாணிக் கையிருப்பு, உலகிலேயே அதிக எண்ணிக்கையான படையினர், நீண்ட வரலாறு, உயர்ந்த கலாசாரம் ஆகிய சிறப்பு அம்சங்களைக் கொண்ட சீனா உலக அமைதிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் என்ன பங்களிப்பைச் செய்கின்றது? சீனாவில் ஏற்படும் பொருளாதார மாற்றங்கள் உலகப் பொருளாதாரத்தில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

### அயலவர்களை அமெரிக்காவை நோக்கி நகர்த்தும் சீனா

சீனா உலகப் பெரு வல்லரசாக உருவெடுத்து மற்ற வல்லரசு நாடுகளை ஓரம் கட்டுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அன்று சோவியத் ஒன்றியம் மேற்கு நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு படைக்கல உற்பத்தியைச் செய்து வீழ்ச்சியடைந்ததை சீனா நன்கு அறியும். இன்று மேற்கு நாடுகளுடன் மோதி விளடிமீர் புட்டீனின் இரசியா பெரும் பொருளாதார நெருக்கடியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதையும் சீனா நன்கு அவதானித்துக் கொண்டிருக்கின்றது. இரசியாவைப் போல் பொருளாதாரத்தை நெருக்கடிக்குக் கொண்டு செல்ல சீனா விரும்பவில்லை. இதனால் சீனா தனது வளர்ச்சியை அமைதியான எழுச்சி எனப்பெயரிட்டுள்ளது. ஆனால் சீனாவின் அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியும் படைவலுப் பெருக்கலும் அதன் அயல் நாடுகளைக் கலவரமடைய வைத்தன. சீனா தனது கடல் எல்லைகளையும் தரை எல்லைகளையும் மற்ற நாடுகள் ஏற்காத வகையில் விரிவு படுத்த முயல்வது இந்த அச்சத்தை மேலும் மோசமாக்கியது. இவை தமது துணைக்கு ஐக்கிய அமெரிக்காவை நாடின. இதன் விளைவாக தென் கொரியா ஜப்பான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் சீனாவுக்கு சவால் விடுக்கக் கூடிய அளவில் அமெரிக்கப் படைத்தளங்கள் உருவாகின. கியூபாவில் இரசியா விட்ட வெற்றிடத்தை சீனா நிரப்ப எந்த முயற்ச்சியும் மேற் கொள்ளவில்லை எனச் சொல்லலாம். அமெரிக்காவின் அயல் நாடுகளுடன் அமெரிக்காவுடன் முரண்பாடுகள் ஏற்படும் போதெல்லாம் சீனா நடு நிலையே வகுத்தது. அமெரிக்காவுக்கு எதிரான ஈரானின் நிலைப்பாட்டுக்கு சீனா பெரும் உதவிகள் எதையும் செய்யாதது ஈரானை சீனாவின் மீது அதிருப்தி கொள்ள வைத்தது.

### இரு அம்ச வெளியுறவும் மூன்று திட்ட வர்த்தகமும்

சீனா தனது வெளிநாட்டுக் கொள்கையில் இரு முக்கிய அம்சங்களைக் கடைப்பிடிக்கின்றது. முதலாவது உலக அரங்கில் ஆதிக்கம் செலுத்தாது இருத்தல் இரண்டாவது அமெரிக்காவுடனான உறவுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். அத்துடன் மூன்று கேந்திரோபாயங்களையும் சீனா வெளிப்படையாகச் சொல்லியுள்ளது.

1. மத்திய ஆசியாவுட னான புதிய பட்டுப்பாதை

2. தென்கிழக்காசியாவூடாகச் செல்லும் கடல்வழிப்பட்டுப்பாதை.

3. இந்தியா, மியன்மார். பங்களாதேசம் ஆகியவற்றினூடான வர்த்தகப்பாதை.

இவை சீனாவின் பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்ட கேந்திரோபாயமாகும். இவற்றிற்கு ஒரு ஆதாரமாக மியன்மாரின் சிட்வே, பங்களாதேசத்தின் சிட்டகொங், இலங்கையின் அம்பாந்தோட்டை, பாக்கிஸ்த்தானின் குவாடர் ஆகிய துறைமுகங்களைக் கொண்ட முத்து மாலைத் திட்டமாகும். நீண்ட கால அடிப்படையில் இவை இந்தியாவைக் கட்டுப்படுத்தும் சீனக் கடற்படைத் துறை முகங்களாக மாற்றப்படும் அபாயம் உண்டு.

### அமெரிக்காவும் சீனாவும்

அமெரிக்காவின் உலக ஆதிக்கத்துக்கு சவால் விடுவதோ அல்லது தான் உலகின் முதல்தர ஆதிக்க நாடாக இருப்பதோ சீனாவின் கொள்கை அல்ல என சீனத் தலைவர்கள் வெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றனர். அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஏற்றுமதி செய்யாமல் சீனாவின் பொருளாதாரம் தாக்குப் பிடிக்காது. சீனாவின் கடன் அமெரிக்க அரசுக்கு மிகவும் அவசியம். ஆனால் 1989 ஆம் ஆண்டில் இருந்தே சீனாவும் அமெரிக்காவும் ஒன்றை ஒன்று ஐயத்துடனேயே அணுகிவருகின்றன. இந்த ஐய நிலை இன்னும் பல ஆண்டுகள் தொடரும். அமெரிக்காவினதும் சீனாவினதும் நலன்கள் பல ஒன்றுபட்டனவாயும், பல ஒன்றுக்கு ஒன்று தேவையானவையாகவும் இருக்கும் வேளையில் பல ஒன்றுடன் ஒன்று முரண்பட்டனவாயும் இருக்கின்றன. அமெரிக்காவுடனான வர்த்தகம் சீனாவுக்கு அவசியம். ஆனால் சீனா அமெரிக்காவில் இருந்து தனது இறக்குமதியை அதிகரிக்க வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்க்கின்றது. சீனா அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் தொடர்பான இரகசியங்களை சீனா இணைய வெளியூடாகத் திருடுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகின்றது. பதினாறு ஆண்டுகள் தொடர்ந்து அமெரிக்காவும் சீனாவும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு இரு நாடுகளும் தமது பெரிய படை நடவடிக்கைகள் தொடர்பாக மற்ற நாட்டுக்கு அறிவிப்பதாக 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒத்துக் கொண்டுள்ளன. அதைத் தொடர்ந்து கடற்பரப்பில் எதிர்பாராத மோதல்களைத் தவிர்பதற்கான ஒரு ஒழுக்கக் கோவை ஒன்றையும் இரு நாடுகளும் உருவாக்கியுள்ளன.

### உலக வங்கியை மீறிய சீன வங்கிகள்

சீன அரச வங்கிகள் உலக வங்கியிலும் பார்க்க அதிக அளவு கடன்களை அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு வழங்குகின்றன. சீனா இந்த நிலையை 2010 ஆம் ஆண்டிலேயே அடைந்து விட்டது. 2009-10 ஆண்டுக் காலப் பகுதியில் சீன அரச வங்கிகள் அபிவிருத்தியடையும் நாட்டு அரசுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் 110 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கியிருந்தன. அதே காலப்பகுதியில் உலக வங்கி நூறு பில்லியன் டொலர்களை மட்டுமே கடனாக வழங்கியிருந்தது. 2014ஆம் ஆண்டு எரிபொருள் விலை வீழ்ச்சியால் நிதி நெருக்கடியைச் சந்தித்த ரஷ்சியாவுக்கும் வெனிசுலாவுக்கும் கடன் வழங்கி அவை பன்னாட்டு நாணய நிதியத்தில் நிபந்தனைகளுடன் கூடிய கடன்களை வாங்குவதில் இருந்து பாதுகாத்தது.

### சீனாவின் புதிய குடியேற்ற (நவ காலனித்துவ) நாடுகள்?

1990களில் இருந்து ஆபிரிக்கக் கண்டங்களில் உள்ள நாடுகளில் உள்ள மூல வளங்கள் சீனாவின் அபிவிருத்திக்கு அவசியம் தேவைப் பட்டபோது சீனா பல ஆபிரிக்க நாடுகளுடன் தனது பொருளாதார ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக் கொண்டது. 2012ஆம் ஆண்டு ஆபிரிக்க நாடுகளின் புதிய குடியேற்ற மேலாளராக சீனா உருவெடுக்கின்றது என்ற குற்றச் சாட்டுப் பரவலாக முன்வைக்கப்பட்டது. இது சீனப் பொதுவுடமைவாதிகளுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியது. இதை அவர்கள் வன்மையாக மறுத்ததுடன் ஆபிரிக்க நாடுகளின் எண்ணெய் வளம், கனிம வளம், மற்றும் விவசாய உற்பத்திகளுக்கு சீனா சிறந்த சந்தையாக விளங்குகின்றது என்றனர். மேலும் அவர்கள் சீனர்களும் ஆபிரிக்கர்களும் ஒருவரை ஒருவர் சம நிலை நண்பர்களாக இருப்பதுடன் என்றும் சிறந்த பங்காளர்களாகவும், அன்பான சகோதரர்களாகவும் இருப்போம் என்றனர். சீனா ஆபிரிக்காவில் (2012வரை) நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளையும், முப்பதுக்கு மேற்பட்ட மருத்துவ மனைகளையும் முப்பதுக்கு மேற்பட்ட மலேரியாத் தடுப்பு நிலையங்களையும், இருபதுக்கு மேற்பட்ட விவசாய தொழில்நுட்ப வழிகாட்டல் நிலையங்களையும் உருவாக்கியுள்ளதுடன் 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான முன்னுரிமைக் கடனையும் வழங்கியுள்ளது எனப் பட்டியலிட்டனர் சீனப் பொதுவுடமைவாதிகள். இவற்றுடன் நிற்கவில்லை சீனா நாற்பதினாயிரம் ஆபிரிக்கர்களுக்குப் பயிற்சி வழங்கியதுடன் இருபதினாயிரம் ஆபிரிக்கர்களுக்கு புலமைப் பரிசில்களையும் வழங்கியுள்ளது. ஆனால் ஆபிரிக்க நாடுகளில் முதலிட்ட சீனா அங்கு வேலை செய்ய தனது நாட்டில் இருந்து தொழிலாளர்களை அனுப்பியது பல ஆபிரிக்கர்களைச் சிந்திக்க வைத்தது. சில ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் இதற்கு எதிராகக் குரல் கொடுத்து சீனா பல ஆபிரிக்க நாடுகளைத் தனது காலனித்துவ நாடுகளாக்கிக் கொண்டு வருகின்றது என்ற குற்றச் சாட்டையும் முன்வைத்தனர். சீனா மேற்கத்திய நாடுகளைப்போல் எந்த ஒரு நாட்டையும் தனது காலனித்துவ நாடாக மாற்றாது எனச் சீனத் தலைவர்கள் மறுத்தனர்.

### அயோக்கிய ஆட்சியாளர்களும் சீனாவும்

சீனா பல நாடுகளுக்கு வழங்கும் நிபந்தனையற்ற கடன்கள் ஊழல் மற்றும் மக்கள் மீது அட்டூழியம் செய்யும் அயோக்கிய ஆட்சியாளர்களைப் பதவியில் வைத்திருக்க உதவி செய்கின்றன. அந்த அயோக்கிய ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களை கிளர்ச்சி செய்யும் நடவடிக்கைகளை மேற்கத்தைய நாடுகள் இலகுவாக மேற்கொள்ள கூடியதாக இருக்கின்றது.

2013ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஆபிரிக்க நாடுகளுக்கு மேற்கொண்ட பயணமும் அதைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வாஷிங்டனில் ஐம்பது ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களை அழைத்து ஒரு மாநாடு நடத்தியமையும் ஐக்கிய அமெரிக்கா ஆபிரிக்காவில் சீனா ஆதிக்கத்தை தணிக்கவும் ஆபிரிக்க நாடுகளுடன் அமெரிக்காவின் உறவை வளர்க்கவும் எடுத்த நடவடிக்கைகளே. உலகில் வேகமாக வளரும் முதற் பத்து நாடுகளில் ஆறு ஆபிரிக்காவில் உள்ளன. இதனால் ஐக்கிய அமெரிக்கா ஆபிரிக்காவில் அதிக அக்கறை காட்டுவது தவிர்க்க முடியாதது. ஒபாமா ஆபிரிக்க நாடுகளுடன் மாநாடு நடாத்தும் போது அங்கு அழைக்கப்பட்ட கினியா, கம்பியா, எதியோப்பியா ஆகிய நாடுகளின் அடக்கு முறை ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பலர் ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

சீனா தனது வெளியுறவுக் கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

சீனா சொல்வது போல் மற்ற நாடுகளுடன் பங்காண்மையை வளர்க்க வேண்டுமாயின் அந்த நாடுகளில் நல்லாட்சியை உறுதி செய்ய வேண்டும். அல்லது அங்கு படைத்துறைப் புரட்சி, அரசுக்கு எதிரான கிளர்ச்சி, அல்லது பெரும் பணம் செலவழித்துப் பல அரசியல்வாதிகளைக் கட்சி மாறச் செய்தல் போன்றவற்றால் அங்கு சீனாவுக்கு சார்பற்றவர்களை மேற்கு நாடுகளால் ஆட்சி மாற்றம் செய்ய முடியும். இப்படிப்பட்ட ஆட்சி மாற்றங்களால் சீனா பெரும் முதலீடுகளால் உருவாக்கும் தனக்குச் சார்பான ஆட்சியாளர்கள் ஆட்சியில் இருந்து இலகுவாகத் தூக்கி எறிவதைத் தடுக்க தனது வெளியுறவுக் கொள்கையில் பெரு மாற்றங்கள் செய்ய வேண்டும்.



# அம்பலப்படும் பாதாள ஆட்சி

**- அக்கினிக்குமரன்**



“முதலாவதும் தேசம், இரண்டாவதும் தேசம், மூன்றாவதும் தேசம்" என்ற கோஷம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ வால் பொது மேடைகளில் உச்சரிக்கப்படும் வாசகங்கள். அதன் அர்த்தம் மஹிந்த அரசின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் தேசத்தின் நலன் சார்ந்தது என்றே மக்கள் நம்பினர்.

ஆனால் அண்மையில் தொடர்ச்சியாக வெளிவரும் தகவல்கள் மஹிந்த சொன்னதன் அர்த்தம் வேறு விதமானது என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. அதாவது "முதலாவதும் ஊழல் மோசடி, இரண்டாவதும் ஊழல் மோசடி, மூன்றாவதும் ஊழல் மோசடி "என்றே மஹிந்தவின் ஆட்சியை அர்த்தப்படுத்த வேண்டுமோ என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதி ஆட்சி முறையே இலங்கையில் நிலவியதாக மக்கள் நம்பினர். உலகிலேயே மிகப் பெரிய ஒரு அமைச்சரவையை இலங்கை கொண்டிருந்த போதிலும் அமைச்சர்கள் எவரும் சுதந்திரமாகச் செயற்பட முடியாதவர்களாகவும், அமைச்சரவைச் செயலாளர்கள் மூலமே ஆட்சியதிகாரம் மேற்கொள்ளப்பட்டது. அமைச்சரவையோ,நாடாளும்ன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோ, ஜனாதிபதிக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் தலையாட்டும் கூட்டங்களாகவே மாற்றப்பட்டிருந்தன.

இது கடந்த அரசின் ஆட்சியின் போது வெளிப்படையாகத் தெரிந்த உண்மைகள். வெளிப்படைக்கு ஜனநாயக ரீதியான நிறைவேற்று அதிகார ஆட்சி நடப்பதாக தோன்றினாலும் உண்மையில் பிரகடனப்படுத்தப்படாத சர்வதிகார ஆட்சி முறையே இலங்கையில் இருந்து வந்தது.

ஆனால் அண்மைக்காலத்தில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள், இந்த விதமான ஆட்சிக்கு உள்ளேயே இன்னுமொரு பாதாள உலகத்தை ஒத்த ஆட்சி நிலவி வந்தமையை வெளிப்படுத்தி வருகின்றன. அந்த ஆட்சி ஜனாதிபதிச் செயலகம், பொலிஸ் திணைக்களம், நீதித்துறை அபிவிருத்தி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உட்பட பல முக்கிய அதிகார மையங்களிலும் தனது கரங்களை விரித்து சகலதையும் ஒரு நிகழ்ச்சி நிரலுக்கேற்ற வகையில் ஆட்டிப் படைத்து வந்தமை பற்றிய முறைப்பாடுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இந்த அதிகார மையம் ஊழல், மோசடி, படுகொலைகள் , அதிகார துஷ்பிரயோகம், நீதித்துறையின் சுதந்திரத்துக்கு விலங்கு போடல் முதலிய விடயங்களில் தான் தோன்றித் தனமாகச் செயற்பட்டு வந்துள்ளது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் செல்லப்பிள்ளையாக (செல்லப்பிள்ளை என்பதை விடவும் செல்ல நாய்க்குட்டியாக ) விளங்கியவர். அவரின் குற்றங்களும் அவரின் மகன் மாலக்க சில்வா மேற்கொண்ட குற்றங்களும் பல முறை தண்டனைகளுக்கு உட்படுத்தாமல் தப்பிக் கொண்டன. எனினும் ஜனாதிபதித் தேர்தலுக்கு சில மாதங்கள் முன்பு மாலக்க சில்வா ஒரு உல்லாச விடுதியில் வைத்து வெளிநாட்டவர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அதையடுத்து மேர்வின் சில்வா கோபமடைந்தார்.

தற்சமயம் மேர்வின் சில்வா சில கோப்புகளுடன் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதில் முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர் பாரத லக்ஷ்மனின் கொலைக்கும்,பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க வின் கொலைக்கும் பின்னணியில் நின்று செயற்பட்டு, வெள்ளைவான் கடத்தல்களை ஆரம்பித்து வைத்தது போன்ற குற்றங்களின் சூத்திரதாரி முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ வே என அவர் முறைப்பாடு செய்துள்ளார். மேர்வின் ராஜபக்ஷ குடும்பத்தின் உள் வீட்டுப் பிள்ளையாக இருந்தவர் . எனவே அவர் வெளியிட்ட தகவல்களை எவராலும் அலட்சியம் செய்து விட முடியாது.

கொழும்பு வடக்கின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் மனைவி செய்துள்ள முறைப்பாடும் கவனத்தில் எடுக்க வேண்டியதாகும். பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஜின்வாஸ் குணவர்த்தன கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக விளக்கமறியலில் இருந்து வருகிறார். திறைசேரியில் இருந்த 50கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை விற்க முயன்ற சம்பவத்துக்கும் , முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுர சேனநாயக்க ஆகியோரின் ஊழல் விவகாரத்தில் ஒத்துழைக்க மறுத்து விட்டதாலுமே குறித்த பிரதிப்பொலிஸ் மா அதிபர் கைது செய்யப்பட்டார் என



அவரது மனைவி தற்போது முறைப்பாடு செய்துள்ளார்.இதில் எது உண்மை ? எது பொய்? என இப்போது முடிவு செய்ய முடியாவிட்டாலும் குணவர்த்தன கொலைக்குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதும், திறைசேரி தங்கம் தொடர்பாக ஒரு மோசடி முயற்சி கள் இடம்பெற்றமையும் தெளிவாகத் வெளித் தெரிய வருகின்றன.

பொதுபலசேன என்ற அமைப்புக்கு பாதுகாப்பு அமைச்சராலேயே தலைமைக் கட்டிடம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே திறந்து வைத்தார். பேருவளை, அளுத்கம பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட உடைப்புகள், எரிப்புகள், அழிப்புகள் உட்பட வன்முறைகள் யாவும் பொதுபலசேனாவின் தூண்டுதலின் பேரில் அவர்களின் அனுசரணையுடனேயே மேற்கொள்ளப்பட்டன. பள்ளிவாசல் உடைப்புகள், அமைச்சு செயலகத்துக்குள் அத்து மீறிப் புகுந்து கலாட்டா செய்தமை போன்ற வன்முறைகள் பொதுபல சேனாவின் தலைமையிலேயே இடம்பெற்றன. எனினும் அவர்களின் மீது எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. எவரும் கைது செய்யப்படவுமில்லை.

பாதுகாப்புச் செயலரின் அனுசரணையுடனேயே அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையில் சுதந்திரமாகச் ஈடுபட்டனர் என நம்பப்பட்டது.இன்றும் நம்பப்படுகிறது.

பாதுகாப்புச் செயலரின் பதவி பறிபோன பின்பு பொதுபல சேனாவினர் பெட்டிப் பாம்பாக மாறிவிட்டதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அரச நிதியான 80கோடி ரூபா முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயாவின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளது. இது இராணுவத் தலைமையகம் அமைப்பதற்காக தன்னிடம் அமைச்சரவை அனுமதியுடன் வழங்கப்பட்டதாகக் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி அரச நிதியை தனிப்பட்டவர்களுக்கு வழங்குதல் சட்டவிரோதம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே மோசடி செய்யும் நோக்குடனேயே கோத்தபாயாவின் கணக்கில் வைப்பில் இடப்பட்டதாக கூறப்படுகிறது.

இதே வேளை ஒரு காலத்தில் வடபகுதியைக் கலக்கிய வெள்ளை வான்களை நாம் மறந்து விட முடியாது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனக் கருதப்பட்டவர்களாலும், பாதுகாப்புச் செயலருக்கு மிக நெருக்கமானவரான ஒரு முன்னாள் அமைச்சரின் கையாள்களாலுமே இந்த வெள்ளை வான்களில் வந்து கொலை , கொள்ளை, ஆள்கடத்தல் , அச்சுறுத்தல் , ஜனநாயகப் போராட்டங்களுக்கு எதிரான செயல்கள் உட்பட வன்முறைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. இதில் பாதுகாப்பு அமைச்சுக்குச் சம்பந்தமில்லை எனச் சொல்லி விட முடியுமா?

அடிப்படையில் பாதுகாப்புச் செயலரின் அனுசரணைய்யுடன் பல சட்ட விரோத நடவடிக்கைகள் ஒரு பாதாள உலகக் குழுவின் பாணியில் சட்டம் , நீதி என்பவற்றை தமக்குச் சாதகமாக வளைத்துச் செயற்படுத்தப்பட்டுள்ளமை வெளிவந்துள்ளது.

தற்சமயம் ஒரு பிரதான அதிகார மையம் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டமை உண்மைகளைக் கண்டறிவதுடன் ஆரோக்கியமான பலன்களை நிச்சயம் தரும் என நம்பலாம்.

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை



sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 567 7609


## விட்டுக் கொடுக்கலாம் தானே ?

ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்தவை வீழ்த்துவதற்காக ஒன்றுபட்டவர்கள் இப்போது மெல்ல மெல்ல தமது எதிர் எதிர் நிலைகளுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் மஹிந்தவுக்கு எதிரான கூட்டில் இடம்பெற்றிருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் , முஸ்லிம் காங்கிரசும் கிழக்கு மாகாண முதலமைச்சர் விடயத்தில் முரண்படத் தொடங்கிவிட்டனர்.

2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்,ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் ஏட்டிக்குப் போட்டியாக ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த போதும் குறித்த இரண்டு பிரதான கட்சிகளாலும் பெரும்பான்மைப் பலத்தை அடைய முடியவில்லை. எனவே முஸ்லிம் காங்கிரசின் ஆதரவு கிடைக்கும் கட்சியே ஆட்சியமைக்க முடியும் என்ற சூழல் உருவானது. இதனை வைத்து பேரத்தில் இறங்கியது முஸ்லிம் காங்கிரஸ். இந்த நிலையில் கிழக்கில் கூட்டமைப்போடு தேசிய அரசு ஒன்றை அமைக்கவும் முதலமைச்சர் பதவியை கூட்டமைப்புக்குத் தரவும் மஹிந்த அரசு தூது அனுப்பியது. அரசு சர்வதேச மட்டத்தில் நல்ல பெயரை வாங்கி தன் மீதான போர்க் குற்றக் கறைகளை இல்லாமல் செய்து விடவே இப்படி நாடகம் ஆடுகிறது என்று கூட்டமைப்பு புரிந்து கொண்டது. எனவே தேசிய அரசும் வேண்டாம், முதலமைச்சர் பதவியும் வேண்டாம் என்று மஹிந்தவின் அழைப்பைப் புறக்கணித்து விட்டு முஸ்லிம் காங்கிரசுடன் பேரத்தில் இறங்கியது. இதன் போது முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரசுக்கே கொடுப்பதற்கு கூட்டமைப்பு இணங்கியது. ஆனால் மத்தியில் ஹக்கீம் அமைச்சுப் பதவியை பெறுவதற்காக கூட்டமைப்பின் கோரிக்கையை உதாசீனப்படுத்தி விட்டு மஹிந்த அரசோடு கைகோர்த்தார். இதன் மூலம் முஸ்லிம்காங்கிரசின் துணையோடு கிழக்கு மாகாண சபையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி செய்யத் தொடங்கியது. அத்துடன் முதலமைச்சர் பதவி கூட முஸ்லிம் காங்கிரசுக்கு கொடுக்கப்படவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்ட நஜீத் என்பவரே முதலமைச்சராகத் தெரிவானார். இதன் போதெல்லாம் முஸ்லிம் காங்கிரஸ் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. கைகட்டி வாய் பொத்தி ஒரு சேவகனைப் போலவே அந்தக் கட்சி நடந்து கொண்டது.

ஆனால் 2015 ஜனவரி 09க்குப் பின்னர் நாட்டில் அரசியல் காட்சிகள் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அதிலிருந்து விலகி மைத்திரி அணிக்கு வந்து விட கூட்டமைப்பு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றது. ஆயினும் அது ஆட்சியமைக்க இன்னும் சில ஆசனங்கள் தேவைப்பட்டதால் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸோடு பேச்சில் இறங்கியது. ஆனால் இந்த முறை "எங்களுக்கு முதலமைச்சர் பதவியைத் தந்தால் மாத்திரமே ஆட்சியமைக்க ஆதரவு தருவோம்'' என்று ஒரே பிடியில் நிற்கிறது முஸ்லிம் காங்கிரஸ். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்த போதோ அல்லது "முதலமைச்சர் பதவியை தருகிறோம் ஆதரவு தாருங்கள்" என்று கூட்டமைப்பு 2012இல் கேட்ட போதோ அலட்டிக் கொள்ளாத முஸ்லிம் காங்கிரஸ் இப்போது மட்டும் முதலமைச்சர் பதவியைக் கேட்பது நியாயமாகத் தெரியவில்லை.

உண்மையிலேயே அந்தக் கட்சி முதலமைச்சர் பதவியை விரும்பியிருந்தால் 2012இல் இப்போது போன்று கூட்டமைப்பு ஆட்சி அமைக்க உதவி விட்டு அந்தப் பதவியை அடைந்திருக்கலாம்.இல்லாது விடில் மஹிந்த அரசோடு மல்லுக்கட்டி முதலமைச்சர் பதவியை வாங்கியிருக்கலாம். ஆனால் அப்போது அந்தக் கட்சிக்கு மத்தியில் ஹக்கீமுக்கு ஒரு அமைச்சுப் பதவியைப் பெறுவதே நோக்கமாக இருந்தது. எனவே தான் வலிய வந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை காலால் உதைந்தது. இப்போது ஞானோதயம் வந்து முதலமைச்சர் பதவி வேண்டும் என்று அடம்பிடிக்கிறது. பேரின அரசுக்கு விட்டுக்கொடுத்த முதலமைச்சர் பதவியை தங்கள் சகோதர இனத்துக்கு விட்டுக் கொடுப்பதில் என்ன நட்டம் வந்து விடப்போகிறது முஸ்லிம் காங்கிரசுக்கு?

**- புருஜோத்தமன் தங்கமயில்**

கிழக்கு மாகாண சபையின் புதிய முதலமைச்சர் யார்?, என்பது தொடர்பிலான இழுபறிக்கு இன்னமும் முடிவு காணப்படவில்லை. தமிழ் பேசும் மக்களின் இரு பிரதான கட்சிகளும் விட்டுக் கொடுப்பின்றி தன் பக்க நியாயங்களோடு அடம்பிடிக்கின்றன. நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜனநாயக இடைவெளியொன்று வாய்த்திருக்கின்ற நிலையில், அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் பெரு முனைப்புக்களுக்காக சரியாகக் கையாள வேண்டிய தருணம் இது. ஆனால், இரண்டு கட்சிகளும் கிழக்கு முதலமைச்சர் விவகாரத்துக்குள் மாட்டிக் கொண்டு காலத்தைக் கடத்துகின்றன. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் விலகியது. அந்தத் தருணத்திலிருந்து பெரும்பான்மையற்ற நிலையில், கிழக்கு என்கிற நிலையில், தேர்தல் காலத்திலேயே கூட்டாட்சிக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் விடுத்தது. தேர்தல் முடிவுகளும் அதையே பிரதிபலித்தன. மொத்தமுள்ள 37 ஆசனங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 14 (2 போனஸ்) ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 8 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தது. அந்தத் தருணத்திலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை விட்டுத் தருவதாகக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டாட்சிக்கான அழைப்பினை விடுத்தது. சில சந்திப்புக்களும் கூட அப்போது இரு கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்றன. ஆனாலும், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக்




கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கான ஆதரவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியது. அப்போது, மொத்தமுள்ள 5 வருடங்களில் 2 வருடங்கள் என்கிற அளவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் முதலமைச்சர் பதவியைப் பகிர்ந்து கொள்வதென்று இணக்கப்பாடு காணப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்பிரகாரமே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அப்துல் மஜித் முஹமட் நஜீப் (தனித்த) கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது முதலமைச்சரானார். கிழக்கு மாகாண சபையில் தற்போது ஏற்பாட்டுள்ள ஆட்சி மாற்ற சூழ்நிலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தே எதிர்கொள்ள வேண்டும். எந்தவொரு தருணத்திலும் மாற்றுக் கட்சியொன்றோடு

மாகாணசபையின் ஆட்சியையும் தார்மீக ரீதியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இழந்துவிட்டது. அன்றிலிருந்து சுமார் ஒரு மாத காலத்துக்கும் மேலாக புதிய முதலமைச்சர் சர்ச்சை நீடிக்கின்றது. தமிழ் பேசும் மக்களுக்கிடையில் கடந்த கால அசாதாரண சூழ்நிலைமைகளினால் ஏற்பட்ட இன ரீதியான முறுகல்களையும், கசப்புணர்வுகளையும் குறைப்பதற்கான வழிவகைகளை நோக்கியும் செல்ல வேண்டிய வேளை இது. அதற்கான ஒரு சந்தர்ப்பமாக கிழக்கு மாகாண சபை விவகாரத்தை(யும்) கைக்கொள்ள வேண்டும். மாறாக, முறுகலையும், கசப்புணர்வையும் அதிகரிக்கும் விடயமாக மாற்றிவிடக்கூடாது. 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற கிழக்கு

**கிழக்கு மாகாண சபையில் தற்போது ஏற்பாட்டுள்ள ஆட்சி மாற்ற சூழ்நிலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தே எதிர்கொள்ள வேண்டும். எந்தவொரு தருணத்திலும் மாற்றுக் கட்சியொன்றோடு இணைந்து ஆட்சியமைக்கும் சூழலுக்கு செல்லக் கூடாது. அது, தமிழ் - முஸ்லிம் உறவினை இன்னமும் சீர்கெடுத்துவிடும்.**

மாகாண சபைத் தேர்தலில் மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டது. அப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி என்கிற நான்கு முனைப் போட்டியே காணப்பட்டது. எது எப்படியாக இருந்தாலும் தனித்த ஒரு கட்சி ஆட்சியமைக்கும் சூழலை கிழக்கு மாகாண சபையின் தேர்தல் முடிவுகள் வழங்காது இணைந்து ஆட்சியமைக்கும் சூழலுக்கு செல்லக் கூடாது. அது, தமிழ் - முஸ்லிம் உறவினை இன்னமும் சீர்கெடுத்துவிடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவோடோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுடனோ ஆட்சியமைப்பதனை பெருமளவில் விரும்பவில்லை. அது, ஒப்பீட்டளவில் சரியாகவும் இருக்காது. மறுபுறத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம்

(8ஆம் பக்கம் பார்க்க)

# பின்கதவு நுழைவுகள்



- ஊழியான்

**“ஹலோ வணக்கம்”**

**“ஓம் வணக்கம்”**

**“யார் நீங்க?”**

**“நாங்கள் தியேட்டரில இருந்து கதைக்கிறம் ”**

**“எந்த தியோட்டர் ராஜாவா? மனோகராவா?..**

**“இல்லை தம்பி நாங்கள் அமைச்சரின் தியேட்டரில இருந்து கதைக்கிறம். நீங்கள் கம்பசில ஏதோ வேலைக்கு போட்டிருக்கிறீங்க உங்கட பெயர் எங்களுக்கு வந்திருக்கு நீங்க ஒருக்கா அமைச்சரை வந்து சந்திச்சுட்டு போங்கோ!”**

**“கட்டாயம் வர வேணுமா?”**

**“வந்தா நல்லம் இல்லாட்டி வேலை கிடைக்கிறது கஸ்ரம் ...”**

**தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்படுகிறது.**

-----------------

இது 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் யாழ். பல்கலைக் கழக பணியாளர் நியமனத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் செயற்பாடு. யாழ்.பல்கலைக்கழகத்தில் பதவி வெற்றிடம் என்று பகிரங்கமாக பத்திரிகைகளில் விளம்பரம் வெளியாகும். அதற்கு அருகில் சிலவேளைகளில் போலிகளை கண்டு ஏமாறாதீர்கள் என்ற சமூக சேவை விளம்பரங்களும் வரத்தான் செய்கிறது.

வேலை வாய்ப்பு விளம்பரங்களைப் பார்த்தவுடன் எப்படா அரசாங்க வேலை கிடைக்கும்? என்று ஏங்கி நிற்பவர்களுக்கு ஒரு சிறிய ஆனந்தம் ஏற்படும். விண்ணப்பத்தின் முடிவுத் திகதி முடிவதற்கு முன்னரே அவற்றை நிரப்பி அனுப்பி விடுவார்கள்.

ஆனால் அதற்கு முன்னரே ஶ்ரீதர் தியேட்டரில் குடிகொண்டிருக்கும் ஈ.பி.டி.பி கட்சி அலுவலகத்தில் குறித்த வேலைக்கு யாரை நியமிப்பது என்று முடிவு செய்யப்பட்டு விடும். அப்படி நியமனம் பெறுபவர்கள் குறித்த கட்சியின் வால்பிடிகளாகவோ அல்லது அவர்களின் உறவினர் களாகவோதான் இருப்பார்கள். இது தான் கடந்த சில வருடங்களாக யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வேலைக்கு ஆள்களை எடுக்கும் முறை.

இதனை தட்டிக் கேட்க எவராலும் முடியாது. அரசியல் தலையீடுகள் பல்கலைக்கழகத்தில் வேண்டாம் என்று சிலர் சொல்ல முனைந்தால், துணைவேந்த ரையே ஜனாதிபதி என்ற அரசியல்வாதி நியமிக்கும் போது ஏன் தம்பி நாங்கள் அரசியல்வாதிகளிடம் போய் நிற்க கூடாது? என்ற நியாயம் பிளந்த பீடாதிபதிகளும் உண்டு.

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கில் ஜனநாயகப் போராட்டங்களை நடத்துவதற்கான சூழமைவு ஏற்பட்டுள்ளது. மைத்திரியின் ஆட்சியினால் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றே இந்தச் சூழமைவும். எனினும் இந்த மாற்றம் இன்னும் எத்தனை மாதங்களுக்கு நீடிக்கும் என்ற சந்தேகமும் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

இந்தநிலையில் தான் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வெளிவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட பேரவை உறுப்பினர்களை வெளியேறக் கோரி கடந்த சனிக்கிழமை பேரவைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்பதாக ஒரு போராட்டம் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையானது 27 அங்கத்தவர்களைக் கொண்டது. உள்ளக ரீதியாக 13 உறுப்பினர்களையும், வெளியக ரீதியாக 14 உறுப்பினர்களையும் இது கொண்டுள்ளது.

பல்கலைக்கழகச் சட்டம் 1985 பிரிவு 44(1) இன் படி கல்வி, தொழில்சார் நிபுணத்துவம், வர்த்தகம், கைத்தொழில், விஞ்ஞான, நிர்வாக வட்டங்களில் கௌரவிக்கத் தக்க வகை யில் சேவையாற்றியோரிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் வெளிவாரி உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். ஆனால் இங்கு அப்படி நடப்பதாகத் தெரியவில்லை.

> **மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கில் ஜனநாயகப்போராட்டங்களை நடத்துவதற்கான சூழமைவு ஏற்பட்டுள்ளது. மைத்திரியின் ஆட்சியினால் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்றே இந்தச் சூழமைவும். எனினும் இந்த மாற்றம் இன்னும் எத்தனை மாதங்களுக்கு நீடிக்கும் என்ற சந்தேகமும் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.**

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவும் அவரது ஈ.பி.டி.பி. கட்சியும் யாழ். பல்கலைக்கழகத்தில் தமது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்த முனைந்தனர் என்று பல்கலைக்கழகச் சமூகத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களை ஒவ்வொரு மாதமும் தியேட்டருக்கு தவறாது அழைத்து, மாத இறுதியில் இடம் பெறவுள்ள பேரவைக் கூட்டத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்களையும் அதற்கான முடிவுகளையும் டக்ளஸே தீர்மானிப்பார். துணைவேந்தரும் சில பீடாதிபதிகளும் இந்த படமாளிகைக்கு அடிக்கடி சென்றுவந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தப் படமாளிகைப் பயணம் பெரும்பாலும் இரகசியமாகவும் சில சமயங்களில் பகிரங்கமாகவும் இடம்பெற்றது.

எனவே அண்மைக்காலமாகப் பல்கலையில் எடுக்கப்பட்ட பேரவைத் தீர்மானங்கள் யாவும் பல்கலைக் கழகத்தின் நலனை விடவும் குறித்த கட்சியின் நலனை மையப்படுத்திய தாகவே அமைந்தன. மாணவனுக்கோ அல்லது பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியருக்கோ உயிர் போகுமளவுக்கு பிரச்சினை ஏற்பட்டு அதலிருந்து மீள்வதற்கு பேரவை உறுப்பினர்களை நாடினால், அவர்கள் சிறிதர் தியேட்டர் கதவுகளை தட்டுமாறு கூறுவார்கள். அப்படித் தியேட்டர் வாசலுக்குப் போய் தவம் கிடந்தால் தான் பிரச்சினையில் இருந்து மீள முடியும். அப்படி இல்லாமல் தியேட்டர் வாசலை மிதிக்க மாட்டோம் என்ற கொள்கையோடு இருந்தால் அந்தப் பிரச்சினை இன்னும் பூதாகரமாக்கப்பட்டு மாணவர்களோ அல்லது கல்விசாரா ஊழியர்களோ கைது செய்யப்படும் நிலைமையும் ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் தங்களுக்கு எதிரானவர்களை தங்களின் பக்கம் இழுப்பதற்காகக் கூட இப்படியான பிரச்சினைகளை குறித்த கட்சி வலிந்து உருவாக்கியதாகவும் சொல்லப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கணினிப் பிரயோக உதவி யாளர் பதவிக்கு 2011 இலும், 2012 இலும் அனுப்பப்பட்ட நியமனப்பெயர்ப் பட்டியல்களில் முன்னாள் அமைச்சர் டக்ளஸின் சிபார்சைப் பெறாதவர்களும் இடம்பெற்றிருந்தனர். எனவே குறித்த பணிக்காக எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை, நேர்முகத் தேர்வு முதலியவற்றில் சித்தி பெற்றவர்களில் 50 பேரின் நியமனங்கள் நியமனக் கடிதம் வழங்கும் தருணத்தில் உடனடியாக நிறுத்தப்பட்டன.

இதேபோன்று சுருக்கெழுத்தாளர், எழுதுவினைஞர் நியமனங்களிலும் தகுதி வாய்ந்தவர் களின் நியமனங்கள் தடை செய்யப்பட் டன. தெரிவுப் பரீட்சைகளில் சித்திபெறாத பலரே கணினிப் பிரயோக உதவியாளர்களாகவும், எழுது வினைஞர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதற்குக் காரணம் பேரவையிலுள்ள வெளி உறுப்பினர்களே.

இதனை தவறு என்று எடுத்துக் காட்டிய மாணவர் ஒன்றியங்களுக்கு படிக்க வந்தால் படிக்கிற வேலைகளை மட்டும் பாருங்கள் என்று துணைவேந்தர் அனுப்பி வைத்த சம்பவங்களும் உண்டு!

இதனை எல்லாம் மாற்ற வேண்டும் என்று பல்கலைக்கழக சமூகம் நினைத்தது. ஆனால் மஹிந்த வின் ஆட்சியில் போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ நடத்தினால் அது பயங்கரவாதச் செயலாகவே பார்க்கப்பட்டும் சிலவேளைகளில் துப்பாக்கி பிடிகளினால் அடிகளும், சிறை வாசமும் தான் பரிசாகக் கிடைத்திருக்கும்.

இந்த நிலையில் தேசிய அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தால் இப்போது வடக்குப் பகுதியிலும் ஓப்பீட்டளவில் ஓரளவுக்கு ஜனநாயகச் சூழல் மலரத் தொடங்கியுள்ளது. இந்தச் சூழலைப் பயன்படுத்தி, பல்கலையில் களையாக இருக்கும் அரசியல் கட்சிசார் பேரவை உறுப்பினர்களை வெளியேற்றி, பல்கலையைச் சுத்தப்படுத்தும் போராட்டங்கள் முளைத்துள்ளன. ஆனால் பின்கதவால் பேரவைக்கு வந்தவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மதிப்பளித்து வெளியேறுவதாகத் தெரியவில்லை.

**மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமா அன்னார்**


**உயிர் நீப்பர் மானம் வரின்.**

இதை தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது பேரவை உறுப்பினர்களுக்கு!

- கிரிஷாந்த்

# தயக்கமும் எழுத்தும்

அண்மையில் பெருமாள் முருகனின் நாவலான மாதொருபாகனை எரித்தமைக்காகவும், அவரை அச்சுறுத்தியமைக்காகவும் யாழ்ப்பாணத்தில் கவிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியச் செயற்பாட்டாளர்கள் ஒன்று கூடி தமது கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தனர். யாழ். நூலகத்துக்கு அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இப்போது தான் சுன்னாகம் அனல் மின் நிலைய விவகாரமும் ஓய்ந்திருக்கிறது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஈழத்தில் உள்ள படைப்பாளிகள் எழுத்தாளுமைகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று பார்க்கலாம்.



முதலில் எழுத்தாளன் என்பவன் யார்? பொழுது போகாமல் முகப்புத்தகத்தில் எழுதிப் போட்டுவிட்டு லைக்குகளுக்காக காத்திருப்பவனா? ஊரே எரியும் போது தான் மட்டும் வெறுமனே பார்த்துக் கொண்டு நின்று விட்டு அந்த நிகழ்வை எழுத்தில் எழுதுவது தான் தன் கடமை என்று எண்ணுபவனா? இல்லவே இல்லை. எனக்குத் தெரியும். எழுத்தாளன் என்பவன், புற்களை, செடி கொடி, பூக்களை கூட சக உயிரினமாக மதிக்கக்கூடியவன். காக்கை குருவி எங்கள் சாதி என்று தான் அவனால் எழுத முடியும். எழுத்தாளன் என்பவன் தன் உயிரை விட தன் வாழ்வை விட இந்த பூமியையும் பிரபஞ்சத்தையும் நேசிப்பவன். அவனால் அதன் முன் நெக்குருகி கண்ணீர் விட முடியும். அந்தக் கண்ணீர் தான் அவனுடைய ஒவ்வொரு எழுத்தையும் துலக்கி ஒளிரச் செய்வது. ஆனால், நமது எழுத்தாளர்களோ சோம்பல் பேர்வழிகள். ஏதாவது செய்ய வேண்டுமென்றால், ஓடி ஒளிந்துவிடுவார்கள். உயிர்ப்பயம். பின் எப்படி இவர்கள் மகத்தான இலக்கியங்களை படைக்கப் போகிறார்கள். ஈழத்தில் இருக்கும் ஒரு சில பெண் எழுத்தாளர்களோ தங்களை Promote செய்வதிலேயே காலத்தைக் கழிக்கிறார்கள். என்ன எழுதிவிட்டார்கள் என்று தெரியாது. ஆனால், இலக்கிய வாதிகள்.

சரி, இவர்கள் தான் இப்படி என்றால், எழுத்தாளர்களை ஒன்று திரட்ட உருவாக்கிய சில அமைப்புக்களோ இருப்பதிலேயே பயந்தாங்கொள்ளிகளாக இருப்பது மேலும் துயரம். இப்படியாக தான் இருக்கிறது எழுத்தாளர்களின் நிலைமை. சமீபத்தில் நடந்து ஓய்வுக்கு வந்திருக்கும் சுன்னாகம் அனல் மின் நிலைய பிரச்சினையின் போது நான் உட்பட எந்த எழுத்தாளர்களும் பொருட்படுத்தும் படியாக எதையும் எழுதிவிடவோ அல்லது செய்துவிடவோ இல்லை. காரணம் அசமந்தம். பொறுப்பற்ற தன்மை, வேறு என்ன சொல்ல.

எழுத்தாளனுக்கு சமூகத்தோடு ஏற்பட்டிருக்கும் இடைவெளி பெரியது. எப்படியென்றால் சமூகத்துக்கு எழுத்தாளன் என்றால் யார் என்று தெரியாது, எழுத்தாளனுக்கும் சமூகத்தை தெரியாது. மா ஓ சேதுங்கின் உரையொன்றில் எழுத்தாளர்களின் பணியை அழகாகச் சொல்லுவார். எழுத்தாளர்களே எங்கே இருக்கிறீர்கள்? எங்கிருந்து இலக்கியத்தைப் படைக்கப் போகிறீர்கள்? மக்களிடம் சொல்லுங்கள், அவர்கள் தான் கதைகள் நிறைந்த பொக்கிஷக் கிடங்கு. ஆனால் அவர்களிடம் அறிஞர்களின் மொழியில் பேசாதீர்கள், மக்களின் மொழியில் பேசுங்கள் என்று.

புலம்பெயர்ந்து வேறு தேசத்தில் வாழும் ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவரிடம் இந்தப் பிரச்சினைகளையும், எழுத்தாளர்களின் போக்கினையும் சொல்லி கவலைப்பட்டுக் கொண்டேன். அதற்கு நீர், சுன்னாகம் கழிவு நீர் பிரச்சினை பற்றி ஒரு கவிதையோ, கதையோ எழுதினால் அவர்கள் பாராட்டுவார்கள், அவ்வளவு தான் என்றார். அது தான் உண்மையும்.

எழுத்து என்பது என்ன? எழுத்து என்பது சொல். சொல்லென்பது சத்தியம். அது மனித அன்பின் உருவ வெளிப்பாடு. அது எப்போது கலையாகும்? அது எப்போது தன்னை தன் முழுமையான அர்த்தத்தில் வெளிப்படுத்திக் கொள்ளும்?

பேரன்பு கொண்ட இதயம் எப்போது சொற்களை தீண்டுகிறதோ, அப்போது தான் மற்ற எல்லா இதயங்களோடும் அந்தச் சொற்கள் உரையாடத் தொடங்குகிறது, இலக்கியமென்பதே சமூகத்துடனான முடிவற்ற உரையாடல் தானே, ஆகவே தான் கேட்கிறேன் என்ன வகையான தயக்கம் இது. என்ன வகையான எழுத்தாளர்கள் நீங்கள். உங்கள் துணிச்சலும் தீவிரமும் எழுத்தில் மட்டுமல்ல செயலிலும் இருக்க வேண்டும். அப்போது தான் சமூகத்துக்கும் எழுத்தாளனுக்கும் இடையிலான சுவர் இடிந்து விழும். அன்பை சொற்களில் மட்டுமல்ல செயலிலும் காட்டுங்கள்.

ஆகவே தான் சொல்லுகிறேன், எனதருமை நண்பர்களே, இந்த பூமியால் தாங்க முடியாத பேரன்புடன் உங்கள் வீட்டை விட்டு வெளியே வந்து, முதல் அடியை நிலத்தில் வையுங்கள், பூமி அசைந்து உங்கள் பாதங்களை வாங்கிக் கொள்ளும். பூ என்ற சொல்லை எழுதிப் பாருங்கள், சொல் மலர்ந்துவிடும்.



# கிழக்கு இழுபறி

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஒத்துழைப்போடு ஆட்சியமைக்கும் சூழல் உருவாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் செய்யப்பட்ட பழைய ஒப்பந்தத்தைக் காட்டி ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தயாராக இருப்பதாக தெரிகின்றது. இது, தார்மீக ரீதியில் நியாயமான விடயம் அல்ல. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து முஸ்லிம் மக்களின் ஆணையினால் வெளியேறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைப்பதற்காக மீள இணைவது பொருத்தமானது' அல்ல. அதுபோல, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தருணத்திலேயே அதற்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் மீறப்பட்டுவிட்டதாகவே அர்த்தம் கொள்ளக் கூடியது. இவ்வாறான நிலையில், புதிய அரசியல் சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இப்போதுள்ள இழுபறியில் வைக்கப்படும் வாதங்களும் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. 'கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் காலத்திலும், அதன் பின்னரும் முதலமைச்சர் பதவி விட்டுத் தருகின்றோம். கூட்டாட்சிக்கு வாருங்கள் என்று அழைத்தோம். அப்போது அதனை நிராகரித்துவிட்டு மஹிந்தவோடு இணைந்து ஆட்சியை அமைத்தார்கள். இப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலமைச்சர் பதவியை விட்டுத்தர வேண்டும் என்று கோருவது என்ன வகையிலான நியாயம்?' என்கிற ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாதம் இருக்கின்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ, 'கிழக்கு மாகாண சபையில் மொத்தமுள்ள 37 உறுப்பினர்களில் 15 பேர் முஸ்லிம்கள். ஆகவே, தார்மீக ரீதியில் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராக இருக்க வேண்டும். வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது. அதனைக் கருத்தில் கொண்டும் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைக்க வேண்டும். பழைய விடயங்களைப் பேசுவதற்கான காலம் இதுவல்ல' என்கிறது. இந்த இழுபறிக்கு மத்தியில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இரண்டு தரப்பும் அணுகியிருக்கின்றது. ஆனாலும், அவர் கிழக்கு மாகாண சபை விடயத்தில் தான் தலையிடுவதை விரும்பவில்லை என்று கூறிவிட்டு ஒதுங்கியிருக்கின்றார். இதை ஒத்த கருத்தையே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் முன்வைத்திருப்பதாகத் தெரிகின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் தலையிடாது ஒதுங்கியதையும் நல்ல விடயமாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வுள்ள தமிழ் பேசும் சமூகங்கள் தங்களது பிரச்சினைகள் தங்களுக்குள்ளேயே பேசித் தீர்ப்பதற்கான சந்தர்ப்பத்தின் ஆரம்பமாக இந்த முதலமைச்சர் விவகாரம் இருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமது மக்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதை யாரும் நிராகரிக்க முடியாது. ஆனால், வரும் நாடாளுமன்றத் தேர்தலினைக் கருத்தில் கொண்டு மாத்திரம் விடாப்பிடியான நிலைப்பாட்டினை இப்போது கைக்கொள்வது கிழக்கில் பெரும் முறுகலை ஏற்படுத்தி விடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுக்கான இணக்கப்பாடோ, பேச்சுவார்த்தைகளோ அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டிய தருணம். அது, புத்திஜீவிகளின் பங்களிப்போடு முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றில் புத்திஜீவிகளின் பங்களிப்பு என்பது பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இல்லாமல் எப்போதாவது பயன்படுத்தப்படும் அளவிலேயே இருந்து வந்திருக்கின்றது. வாக்குகளிலான தேர்தல் புத்திஜீவிகளின் பங்களிப்பை பெருமளவில் அனுமதித்து வந்ததும் இல்லை. அதுவே, அரசியலில் இருந்து புத்திஜீவிகளை ஒதுங்கவும் வைத்திருக்கின்றது. ஆனால், தமிழ் - முஸ்லிம் சமூக அரசியலில் புத்திஜீவிகளின் பங்களிப்பு மிகவும் அவசியமாக இருக்கின்றது. தூர நோக்கிலான சிந்தனையோடும், இணக்கப்பாட்டோடும் இரு சமூகங்களும் ஒன்றாகப் பயணிப்பதற்கு அது உதவும். மாறாக, இனமான அரசியலை வாக்குகளைப் பெறுவதற்காக மேற்கொள்ளும் சக்திகளையே தீர்மானம் எடுப்பவர்களாக அனுமதிக்கும் போது பிரச்சினையின் தீவிரம் அதிகரிக்கவே செய்யும். இங்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். முரண்பாடுகள் முன்னோக்கிச் செல்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கியது இல்லை. இவ்வாறான நிலையில், நிலையான பேச்சுக்களினூடு ஒருவரை மற்றொருவர் புறந்தள்ளாது கிழக்கு மாகாண முதலமைச்சர் விடயத்தினை கையாள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அரசியல் ரீதியிலான தீர்மானமாக மட்டும் கிழக்கு மாகாண முதலமைச்சர் விவகாரத்தை கையாளாமல் சமூக ஒற்றுமை மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் அணுக வேண்டும். அதனை தமது மக்களிடம் தெளிவாக முன்வைக்க வேண்டும். இன்னும் 2 வருடங்கள் மாத்திரமே எஞ்சியுள்ள கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலத்தில் குரோதங்களை பெருமளவில் தோற்றுவிக்கும் சாத்தியங்களைத் தவிர்க்கலாம். அது, தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பெரும் வாய்ப்புக்களை வழங்குவதாக அமையும்!

# கம்பஸ்காரருக்கு கடிதமொண்டு




பல்கலைச் சமூகத்துக்கு ஈழப்பாமரனின் வணக்கம்...

சட்டிக்குத் தப்பி அடுப்புக்குள் விழுவதே எங்கடை தலைவிதியாப் போச்சுதோ என்ற சந்தேகத்திலைதான் இதை எழுதிறன். குறை நினைச்சுப் போடாதையுங்கோ....பேரவை வெளிவாரி உறுப்பினர்களை மாத்த வேணும் எண்டு நீங்கள் எல்லோருமா போராட்டம் நடத்துறியள். அது வெற்றியளிச்சு 14 பேரும் விலகுகினம் அல்லது விலக்கப்படுகினம் எண்டு வைப்பம். அதுக்குப் பிறகு 14 கதிரையளுக்கும் யார் வரப் போகினம் என்று யார் தீர்மானிக்கிறது...?

இன்னுமொரு அரசியல்வாதிதானே தீர்மானிக்கப் போகிறார்...? இல்லை அப்பிடி நடக்காது என்று சொல்ல எங்களிட்ட ஒரு உறுதியும் இருக்கிற மாதிரி தெரியேல்லை.

நீங்கள் கஸ்டப்பட்டு கதிரைகளை காலியாக்க பிறகு இதே ஆக்களோ இல்லாட்டி இதேமாதிரி ஆக்களோ வந்து இருந்து பிறகு நீங்கள் பழையபடி போராட வேண்டி வருமெல்லே...

ஆனபடியால்தான் சொல்லுறன்... யார் தவறு என்று சொல்லுறதோடை நிப்பாட்டாமல். இண்டைய நிலைவரப் படி யார் யாரெல்லாம் பேரவைக்கு நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லி ஒரு பட்டியலை வெளியிடலாமெல்லே... இல்லாட்டி கொழும்பிலை இருக்கிறவைக்கு இஞ்சாலை இருண்டது விடிஞ்சது தெரியாதெல்லே.

அதுதான் சொல்லுறன் நீங்களே தயாரிச்சாலும் சரி இல்லாட்டி சனத்திற்றை கேட்டு எழுதினாலும் சரி முதலில இன்னின்னார்தான் அடுத்த பேரவையில இருக்க வேணும் என்று ஒரு பட்டியலை விடுங்கோவன். பிரச்சினையை சொல்லுறதோடை தீர்வுக்கான யோசனையையும் சொல்லுறதுதானே புத்திசாலித்தனம் எண்டு நான் சொல்லியோ உங்களுக்குத் தெரியவேணும்.

என்ன ஒண்டு நீங்கள் விட்ட நோட்டீசுகள் ஆளாளின்ரை கைகளிலை கிடக்கு....ஆனபடியால் கடைசியிலை ஆப்பை தேடிப் போய் இருந்தமாதிரி ஆகிடாமல் உங்கடை குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்ட 14 பேரின் பட்டியலை வெளியிடுவீங்கள் என்ற நம்பிக்கையோடை முடிக்கிறன்.


தாழ்மையுள்ள

**ஈழப்பாமரன்**

---

# எப்பிடி இருந்தனீங்கள். இப்பிடி ஆயிட்டீங்களே....!

மரியாதைக்குரிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அன்பு வணக்கம். நாங்கள் இப்ப நல்ல சுகம். நீங்கள் சுகமோ? சுகமா இருக்க மாட்டியள் எண்டு நல்லாத்தெரியும். இப்பவும் கையில அந்தத் தங்கத் தாயத்து இருக்கோ? இல்லாட்டி அறுத்தெறிஞ்சு போட்டியளோ?



முன்னாள் ஜனாதிபதி என்று தங்களை விளித்துக் கூறும் அளவுக்கு நிலைமை உருவாகிற்று.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒருபிடி சாம்பலாய் வெந்து மண்ணாவதும் கண்டு... என்ற பட்டினத்தடிகளின் ஞான உபதேசமே இந்தக் கடிதம் எழுதும் போது நினைவுக்கு வருகிறது.

நடந்தது நடந்து போயிற்று. சாத்திரி சுமணதாஸ அபயகுணவர்தன அட்டமத்தான் வடிவில் வந்து உங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார். போதாக்குறைக்கு எங்கட தமிழ்ச்சனமும் காலை வாரிவிட்டதால உங்களால ஒண்டும் செய்ய ஏலாமல் போட்டுது.

யாரிடம் என்ன? பலவீனம் இருக்கிறது என்று கடவுளுக்கும் தெரியும் போல. அதனால் சோதிடத்தை நம்பி, இன்னும் இரண்டு ஆண்டுகள் ராசா மாதிரி இருக்க வேண்டிய நீங்கள்... என்ன செய்வது காலம் பிழைத்தால் கறுத்தார்தான் என்ன செய்ய முடியும்? காலம் பிழைத்து விட்டது.

காலம் பிழைத்தாலும் பரவாயில்லை; விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த என்னை சிங்கள மக்கள் ஒரு போதும் பதவி இழக்கச் செய்யமாட்டார்கள்.

நான்; எனக்குப்பின் என் மூத்த மகன்; அடுத்தது இளைய மகன் இப்படியே இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவி ராஜபக்ஷ குடும்பத்திடம் இருக்கும் என்று நீங்கள் நினைத்த அந்தக் கற் பனைக்கோட்டை ஐந்து ஆண்டு களுக்குள் நொருங்குண்டு போன கவலை நிச்சயம் உங்களைப் பாதிக்கும்.

கவனம் ராசா; உடம்பு பக்குவம்; கவலைக்குப் பாவிக்கும் மருந்தை அளவுக்கு அதிகமாக எடுத்துவிட வேண்டாம். என்ன மாதிரி இருந்த வதனம் இப்போது விழிவீங்கிப் போயிற்று.

2014 ஒக்ரோபர் 24 அன்று நாடாளுமன்றத்தில். சிவத்தத்துண்டை உத்தரியமாக அணிந்த கொண்டு 2015 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட் டத்தை நீங்கள் வாசித்ததை எப்படி மறப்பது?

அன்றைக்கு நீங்கள் வாசித்த வரவு செலவுத் திட்டத்துக்கு மேசையில் தட்டி இடையிடையே உங்களை உற்சாகப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது எங்கே? மாடு உண்டு. கன்று உண்டு. மக்கள் உண்டு என்றெண்ணி மகிழ்வதெல்லாம் கேடு உண்டெனும் படி கேட்டு விட்டோம்... என்பது தான் நிஜம் என்றாகி விட்டது.

அன்றைக்கு 2015 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தை



நீங்களே வாசித்தீர்கள். இன்றைக்கு பத்திரிகையில்தான் இடைக்கால வரவு செலவுத் திட்ட த்தை படித்திருப்பீர்கள்.

நாடாளுமன்றத்தில் நின்று வரவு செலவுத்திட்டத்தை வாசித்த நீங்கள் இப்போது பத்திரிகையில் வரவு செலவுத் திட்டத்தை படிக்கும் அளவில் ஏதோ! பாவவினை வந்துறுத்தியது போலும்.

அதுசரி ராசா! அன்றைக்கு ஒரு கிலோ கோதுமை மாவுக்கு ஒரு ரூபாய் குறைக்க உங்களால் முடியாமல் போயிற்று. இன்றைக்கு மைத்திரியால் எப்படி... எப்படி... இப்படி... ஒரு வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடிந்தது? இப்படியான வரவு செலவுத்திட்டத்தை மீறி யாரும் இனிமேல் உங்களை ஆதரிப்பர் என்று எப்படி நம்ப முடியும்.

உங்களோட ஒட்டிக் கொண்டு திரிஞ்சவங்கள் தான் இப்ப உங்கட முதுகில ஓங்கி குத்துறாங்கள். காலை நக்கிக் கொண்டு கிடந்த மேர்வின் ஆடுற ஆட்டம் உங்களால தாங்க ஏலாமல் இருக்கும். உவங்கள் டக்ளஸும் கருணாவும் நக்கித் திண்டிட்டு இப்ப அங்கால போக பிளான் போடுறாங்கள். இனியும் உங்கள நம்பிப் புதுக்கட்சி துடங்கினால் அவ்வளவுதான். கஷ்டப்பட்டு நீங்களும் உங்கட குடும்பமும் மற்றும் உற்றார் உறவினரும் அடிச்சு வைச்சிருக்கிற சனத்தின்ர சொத்து முழுக்க கரைஞ்சு போயிடும்.

ஆகையால் மகனே! மஹிந்த எதிர்கால அரசியல் என்ற பேச்சை விட்டுவிடுவதுதான் புத்திசாலித்தனம். சரி மகன் என்ர வயதுக்கு ஆலோசனை கூறிவிட்டன். பசில். கோத்தா ஆகியோரையும் பக்குவமாக இருக்கச் சொல்லவும். வெளிநாடுகளில் தங்கியிருப்பது நல்லது போலத்



தெரிகிறது. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்.

பிள்ளைகளின் சுகத்தை விசாரித்ததாகச் சொல்லவும். உங்களுக்கும் ஓய்வூதியம் ஆயிரத்தால் அதிகரித்திருக்கும். அது மட்டும் தானே உங்களுக்கு ஆறுதல்.

இப்படிக்கு

உங்கள் முன்னாள் குடிமகன்.


**யாரிடம் என்ன? பலவீனம் இருக்கிறது என்று கடவுளுக்கும் தெரியும் போல, அதனால் சோதிடத்தை நம்பி, இன்னும் இரண்டு ஆண்டுகள் ராசா மாதிரி இருக்க வேண்டிய நீங்கள்... என்ன செய்வது காலம் பிழைத்தால் கறுத்தார்தான் என்ன செய்ய முடியும்? காலம் பிழைத்து விட்டது.**

**காலம் பிழைத்தாலும் பரவாயில்லை; விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த என்னை சிங்கள மக்கள் ஒரு போதும் பதவி இழக்கச் செய்யமாட்டார்கள்.**

**நான்; எனக்குப்பின் என் மூத்த மகன்; அடுத்தது இளைய மகன் இப்படியே இந்த நாட்டின் ஜனாதிபதிப் பதவி ராஜபக்ஷ குடும்பத்திடம் இருக்கும் என்று நீங்கள் நினைத்த அந்தக் கற்பனைக்கோட்டை ஐந்து ஆண்டுகளுக்குள் நொருங்குண்டு போன கவலை நிச்சயம் உங்களைப் பாதிக்கும்.**

# சிம்ம சொப்பனம்

## 07



ஃபிடல் காஸ்ட்ரோ,தனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாக நேசித்தது அவரது வீட்டைத் தான். குறிப்பாக வீட்டின் கீழ்ப்பகுதியில் அமைந்திருந்த பண்ணை. எந்த நேரமும் சிறுவன் காஸ்ட்ரோ இங்கு தான் அமர்ந்திருப்பான். கோழிகள், வாத்துகள், பன்றிகள்,கிளிகள் அனைத்தையும் சுற்றிச் சுற்றி வந்து வேடிக்கை பார்ப்பான். அவை எழுப்பும் ஓசைகளைக் கேட்டு மகிழ்வான். சுற்றிக் கொண்டிருக்கும் கோழிகளைச் சீண்டி விடுவான். வாத்துகளைத் துரத்திக் கொண்டு ஓடுவான். பன்றிகள் உறங்கும் போது தொலைவில் இருந்து பார்த்து ரசிப்பான். இவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகே சேவல் சண்டை மிகப் பிரபலம். கரும்பு அறுவடை செய்யப்படும் சமயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இங்கு சேவல் சண்டை நடைபெறும். பெரிய குழி ஒன்றை வெட்டி வைத்திருப்பார்கள். இதற்குள் தான் சேவல்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும். இதற்காகவே பிரத்தியேகமாக சேவல் வளர்ப்பார்கள். இங்கு கொண்டு வந்து மோத விடுவார்கள். சேவல் இல்லாதவர்கள் பிற சேவல்கள் மீது பந்தயம் கட்டி ரசிப்பார்கள். காஸ்ட்ரோ சேவல் சண்டையை ஆர்வத்துடன் வேடிக்கை பார்ப்பான். சேவல்கள் பறந்து பறந்து சண்டையிடும் போது சிதறி விழும் சிறகுகளை ஆச்சரியத்துடன் பார்த்து ரசிப்பான். வெற்றி பெற்ற சேவலையும் உற்று உற்று பார்ப்பான். பந்தயத்தை மட்டுமல்ல, பந்தயத்தை வேடிக்கை பார்க்கும் மக்களையும் கூட வேடிக்கை பார்ப்பான். வெற்றி பெற்ற சேவல் மீது பணத்தைக் கட்டிய ஆள்கள் பெரும் கூச்சலுடன் குதித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் ஏராளமான பணம் சேர்ந்திருக்கும். கையில் பணம் கிடைத்தவுடன் மதுவிலும் கொண்டாட்டத்திலும் பணத்தைக் கொட்டுவார்கள். அந்த இடமே அமர்க்களமாக மாறிவிடும். எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்து போவான் காஸ்ட்ரோ. சேவல் சண்டை நடைபெறும் குழிக்கு அருகாமையில் பல பனையோலை குடிசைகள் அமைந்திருக்கும். அவற்றையும் நோட்டம் விடுவான்.

இந்தக் குடிசைகளில் பெரும்பாலும் ஹைத்தி அகதிகள் தான் தங்கியிருப்பார்கள். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் க்யூபாவுக்கு வந்து சேர்ந்தவர்கள் இந்த அகதிகள். கரும்புத் தோட்டங்களில் விவசாயிகளாக வந்து சேர்ந்தவர்கள் இந்த அகதிகள். கரும்புத் தோட்டங்களில் விவசாயிகளாக இருப்பவர்கள். காஸ்ட் ரோவுக்கு இந்தக் குடிசைவாசிகளில் சிலரைத் தெரியும். அவர்களுக்கும் காஸ்ட்ரோவை நன்றாகவே தெரியும். அந்தப் பண்ணையிலேயே பெரிய வீடு இவர்களுடையது தானே! காஸ்ட்ரோவைப் பார்க்கும் போதெல்லாம் தன்னுடைய வீட்டுக்குள் வருமாறு அழைப்பார்கள். காஸ்ட்ரோவும் உற்சாகத்துடன் அவர்கள் வீட்டுக்குப் போவான். அவர்கள் ஏழைகள் என்று அவனுக்கு அப்போது தெரியாது. ஆனால் தரைகள் அழுக்காக இருப்பதையும் அவன் குழப்பத்துடன் பார்ப்பான். அந்த வீட்டில் தங்கியிருப்பவர்கள் கிழிந்த ஆடைகளை அணிந்திருப்பதையும் பார்ப்பான்.

சேவல் சண்டைக்கு அடுத்த படியாக அவனுக்குப் பிடித்த பகுதி கரும்புத் தோட்டங்கள். எந்தத் தோட்டத்தைப் பார்த்தாலும் நுழைந்து விடுவார்கள். கரும்பை உடைத்துச் சுவைப்பான். தோட்டங்களில் பணிபுரியும் விவசாயிகளின் குழந்தைகளோடு இணைந்து சுற்றுவான். பிறகு ஏதாவது ஒரு மணல்மேட்டில் அமர்ந்து விவசாயிகள் எப்படி வேலை செய்கிறார் கள் என்று கவனிப்பான். ஏஞ்சல்,லினா இருவருமே காஸ்ட்ரோவை கட்டுப்படுத்தியது கிடையாது. சிறிய வயதிலேயே அவனுக்கு முழு சுதந்திரம் அளித்திருந்தார்கள். தான் விரும்பியதை விரும்பியபடியே செய்ய அவனுக்குப் பரிபூரண உரிமையை அளிக்கப்பட்டிருந்தது. பள்ளியில் முறைப்படி சேர்ந்து புத்தக வாசிப்பைத் தொடங்குவதற்கு முன்னரே காஸ்ட்ரோ தன்னைச் சுற்றி நடைபெறும் சம்பவங்களைக் கவனித்து பாடம் பயிலத் தொடங்கிவிட்டான்.

அப்போது காஸ்ட்ரோவுக்கு 5 அல்லது 6 வயதிருக்கும். ஓரியாண்டில் காஸ்ட்ரோ குடியிருந்த பகுதியில் தேவாலயங்கள் இல்லாமல் போனாலும் குழந்தைகளுக்கு ஞானஸ்தானம் அளிப்பதற்காக மட்டுமே ஒரு பாதிரியார் வந்து போவதுண்டு. அங்கிருந்த அனைவருமே இந்தப் பாரிதியாரிடம் ஞானஸ்தானம் பெற்றவர்கள் தான். மத நம்பிக்கையில்லாதவர்கள் கூட தங்கள் குழந்தைக்கு கடமைக்காகாவாவது ஞானஸ்நானம் செய்து வைப்பார்கள். அவ்வாறு ஞானஸ்நானம் பெறாமல் விடுபட்டுப் போனவர்களை யூதர்கள் என்று அழைப்பது வழக்கம்.

யூதர் என்ற பதத்துக்கு காஸ்ட்ரோவுக்கு அப்போது அர்த்தம் தெரியாது. இருந்தாலும், அவராகவே ஒரு கற்பனை செய்து வைத்திருந்தார். அதாவது யூதர் என்றால் அதிகச் சத்தமிடும் ஒரு விநோதப் பறவை. அதுவும் சாதாரணமான பறவை அல்ல. கறுப்பான, அருவருப்பான பறவை. யாரையாவது சுட்டிக் காட்டி அதோ போகிறாரே அவர் ஒரு யூதர்' என்று சொன்னால் பறவைகளைப் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள்.

---

### சொற்சிலம்பம் போட்டி இல. 658

**மேலிருந்து கீழ்**

1-புறாவுக்காகத் தனது சதையை அறுத்துக் கொடுத்த சக்கரவர்த்தி.
2-காமநோய்.
3- சிறைபிடிக்கப்பட்டவன்.
4-தேசிய விளையாட்டுக்களில் ஒன்று.
5- தோழன்.
6- கைகூப்பு.
7- ஏவுகணை ரகம்.
9- மிக நீண்ட காலத்தைக் குறிக்கும் அளவீடு.
11- ஒன்றை வரவேற்று உதவுவது.
12- மன்மதன் மனம் கவர்ந்தவள்.
13-ஒன்றை வழிப்படுத்தும் பொறுப்பு.
14- மூன்று முனை கொண்ட சூலம்.
16 -தலையில் எழுதப்பட்டது.
18- மறக்காமல் ஞாபகம் கொள்.
19 - நிலா.
20- சைவர்கள் வாயில் அடிக்கடி ஒலிப்பது .

**இடமிருந்து வலம்**

1- பல்லக்கு.
4-சர்பத்துக்குப் போடுவது.
8- பதில் உதவி.
10- வாயினால் கவ்வு.
11 -சான்று.
13 - தகைமை பற்றிய நிலைமை.
15- சிற்பி.
16- நீதி கேட்டு கண்ணகி வந்தது இந்தக் கோலத்தில்.
17- ஒரு குடிவகை ரகம்.
18 -நிலைவரம் பற்றிய தன்மை.
19- இல்லாள்.
20 -பல அல்ல .
21- அரைவாசி.
22 - சடப்பொருள்களின் மூன்று நிலைகளுள் ஒன்று.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | | | | |
| ■ | | ■ | 10 | | ■ | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| 15 | | | ■ | 16 | | | |
| 17 | | ■ | 18 | | | ■ | |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| ■ | 21 | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:--------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 658

■ சொற்சிலம்பம் போட்டி 658ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, பெப்ரவரி 25 ஆம் மற்றும் மார்ச் 04 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 656இல் பரிசு பெற்றோர்

1. செ.சண்முகராசா, தபாலக ஊழியர்,தபாலகம், முள்ளியவளை.
2. ஐ.விஜயபாலன், இல;10,மருதடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.
3. அ.பொ.திரவியநாதன், பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும்,நெல்லியடி,சாவகச்சேரி,கிளிநொச்சி,கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

சி.சயந்தன், இலங்கை மின்சார சபை, முல்லைத்தீவு.

செல்வி சி.ரிஷானி, இல 12/11,இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

திருமதி. தி. ஈஸ்வரி, கந்தசுவாமி கோவிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

திருமதி. இ. மஞ்சுளா, பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.

அ.ஸ்ரீஸ்கந்தராஜா, இல 15/11,புவனேஸ்வரி அம்மாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 656இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பாயாசம்.
2.ரகம்.
3.தம்பதி.
4.சம.
5.கரகம்.
6.இன்.
8.கும்.
10.வருமானம்.
12.காம்.
13.புத்திரன்.
14.படிவம்.
16.தம்.
17.அசதி.
18.மரபு.
19.நகர.
21.வக

**இடமிருந்து வலம்**

1.பாரதம்.
4.சகதி.
7.யாகம்.
8.குமரன்.
9.சம்பவம்.
11.இரு.
12.தாம்பு.
15.மாதம்.
17.அடிமனம்.
19.நதி.
20.சவரம்.
21.அகர.
22.இம்பு.
23.விதுரன்.

# FACE Book

## படம் பார் பாடம்படி














# தனுஷை கைவிட்ட காஜல்



பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். காஜல் அகர்வாலோ பறவை என்றாலே நடுங்குவாராம். அந்தப் பயத்திலிருந்து தற்போது மீண்டிருக்கிறார். இதுபற்றி அவர் கூறியது: பறவைகள் ஏன்றால் எனக்குப் பயம். குறிப்பாக மயில் என்றால் அருகில் செல்லவே பயப்படுவேன். ஆனால் தனுஷுடன் நடிக்கும் மாரி படத்தில் விதவிதமான பறவைகளுடன் நடிக்க வேண்டி இருந்தது.

அருகில் இருந்தவர்கள் எனக்குத் தைரியம் கொடுத்தனர். அந்தத் தைரியத்தில் மயிலை என் கையில் பிடித்தபடி நடித்தேன். தனுஷுடன் சில படங்களில் நடிக்க வந்த வாய்ப்பை, தவிர்த்தது ஏன் என கேட்கிறார்கள். பொல்லாதவன் படத்திலேயே நடிக்க இருந்தேன். அதற்கான ஆயத்தங்களும் நடந்தன. அதேநேரம் தெலுங்கில் சந்தமாமா படத்திலும் நடிக்க வாய்ப்பு வந்தது.

நேரத்தைப் பொறுத்து எதில் நடிப்பது என்பதை முடிவு செய்ய வேண்டிய நிலையில் சந்தமாமா படத்தை தேர்வு செய்தேன். அதன்பிறகும் தனுஷுடன் நடிக்க வாய்ப்பு வந்தபோதும் அதற்கான சூழல் அமையவில்லை என்றார் காஜல்.



# சூப்பர் ஸ்டாருடன் சிவகார்த்தி

சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களில் ஒருவர் சிவகார்த்திகேயன். இவர் நடிப்பில் அடுத்தடுத்து நிறைய படங்கள் வெளியாக இருக்கின்றன.

அதேசமயம் சிவகார்த்திகேயன் நடித்த காக்கி சட்டை படம் வரும் பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி வெளியாக இருக்கின்றது.

இந்த நிலையில் சிவகார்த்திகேயன் ஒரு கன்னடப் படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்க இருக்கிறார். கன்னட சினிமாவின் சூப்பர் ஸ்டார் சிவ ராஜ்குமார் நடிக்க இருக்கும் வச்ரகயா என்ற படத்தின் அறிமுக பாடலில் சிவகார்த்திகேயன் நடிக்க இருக்கிறாராம்.



# நயன்தாரா இடத்தில் ஜாக்சன்

கத்தி படத்துக்குப் பிறகு விஜய், சிம்புதேவன் இயக்கும் புலி படத்தில் ஓய்வில்லாமல் இரண்டு வேடங்களில் நடித்து வருகிறார். இந்தப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக ஹன்சிகா மற்றும் ஸ்ருதிஹாசன் இருவரும் நடித்து வருகின்றனர். விஜய் புலி படத்தையடுத்து அட்லி இயக்கத்தில் நடிக்க இருக்கிறார். அதோடு இந்தப்படத்துக்கு ஜி.வி பிரகாஷ் இசையமைக்கிறார்.

இந்த நிலையில் விஜய்யின் 59ஆவது படத்தில் அவருக்கு ஜோடியாக எமி ஜாக்சன் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தில் முதலில் நயன்தாரா தான் நாயகியாக நடிக்க இருப்பதாக கூறப்பட்டிருந்தது.

# மாகாபா வுடன் ஐஸ்வர்யா



சின்னத்திரை தொகுப்பாளரான மாகாபா ஆனந்த் தற்போது பல படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் வெளியான வானவராயன் வல்லவராயன் படத்தில் கிருஷ்ணாவுடன் இணைந்து நடித்தார். மேலும் 'அட்டி' என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். தற்போது புதுப்படம் ஒன்றில் நடித்து வருகிறார்.

அந்தப்படத்துக்கு 'தீபாவளி துப்பாக்கி' என்று பெயர் வைத்துள்ளனர். இதில் மாகாபா ஆனந்துக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கவுள்ளார். ஐஸ்வர்யா நடிப்பில் கடைசியாக 'திருடன் பொலீஸ்' படம் வெளியானது. 'காக்கா முட்டை' படம் வெளியீட்டுக்குத் தயாராக இருக்கிறது.

தீபாவளி துப்பாக்கி படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பை சென்னையின் சுற்று வட்டார பகுதிகளில் படமாக்கியுள்ளனர்.

# 185 நிமிடத்தில் என்னை அறிந்தால்

அஜீத் நடித்திருக்கும் என்னை அறிந்தால் படத்துக்கான எதிர்ப்பார்ப்பு நாளுக்கு நாள் ரசிகர்களிடம் அதிகமாகி வருகிறது. அதேபோல் படத்தை பற்றி ஏதாவது தகவல்கள் வந்து கொண்டே இருக்கிறது.

பெப்ரவரி 5 ஆம் திகதி வெளியாகவிருக்கும் இந்தப் படத்தைப் பார்க்க தல ரசிகர்கள் மட்டுமின்றி பல சினிமா நட்சத்திரங்களும் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தப் படத்தின் முன்னோட்டம் ஒரு சில நாள்களுக்கு முன்னதாகவே வெளியாகியிருந்தது. ஆனால் தற்போது ஐயங்கரன் நிறுவனம் 'என்னை அறிந்தால்' படத்தின் நீளம் 185 நிமிடம் என்று அறிவித்துள்ளது.

இந்தப்படத்தில் நாசரும் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறாராம் என்பது புதுத்தகவல்.



# கதாநாயகியாக சுப்புலட்சுமி

நடிகர், நடிகைகள், இயக்கு[illegible]ள் [illegible]ள்ளிட்ட திரையுலகினரின் வாரிசுகள் சினிமாவுக்கு வருவ[illegible] சகஜமாகி விட்டது.

விஜய், சூர்யா, கார்த்தி, தனுஷ் முன்னணி வாரிசு நடிகர்களாக உள்ளனர். சிபிராஜ், விக்ரம் பிரபு, கௌதம் கார்த்திக் போன்றோரும் இளம் நடிகர்களாக வலம் வருகிறார்கள்.

ரஜினிகாந்த் மகள்கள் ஐஸ்வர்யா, சௌவுந்தர்யா இயக்குநர்களாகியுள்ளனர். கமல் மகள் சுருதிஹாசன் தமிழ், தெலுங்கு, இந்தி பட உலகில் கதாநாயகியாகியுள்ளார்.



அவரது இரண்டாவது மகள் அக்ஷராஹாசனும் நாயகியாகியுள்ளார். ஷமிதாப் இந்தி படத்தில் தனுஷ் ஜோடியாக நடிக்கிறார்.

முன்னாள் கதாநாயகி ராதாவின் மகள்கள் கார்த்திகா, துளசி இருவரும் கதாநாயகிகளாகியுள்ளனர்.

இந்த வரிசையில் கௌவுதமியின் மகள் சுப்புலட்சுமியும் கதாநாயகியாக நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. சுப்புலட்சுமிக்கு 16 வயது ஆகிறது. நடனம் கற்று சினிமாவுக்கு தயாராகி இருக்கிறாராம்.

பொது விழாக்களுக்கு சுப்புலட்சுமியை கௌதமி அழைத்து வருகிறார். அவரைத் தங்கள் படங்களில் நடிக்க வைக்க இயக்குநர்கள் சிலர் ஆர்வம் காட்டுகிறார்களாம்.

# அனுஷ்காவின் பெருந்தன்மை



**கௌதம் மேனன் இயக்கத்தில் அஜீத் நாயகனாக நடிக்கும் என்னை அறிந்தால் படத்தில் அனுஷ்கா, திரிஷா இருவரும் நாயகியாக நடித்து வருகின்றனர்.**

**இந்தப் படத்தில் திரிஷாவுக்காக தன்னுடைய வேடத்தை விட்டுக் கொடுக்க முன்வந்தாராம் அனுஷ்கா. இதுபற்றி, கௌதம் மேனன் கூறுகையில், திரிஷாவிடம் கதை சொன்னபோது, அனுஷ்கா கதாபாத்திரம் பற்றி விசாரித்தார். ஆனால், திரிஷா வின் கதாபாத்தி ரம் பற்றி அனுஷ்கா விசாரிக்கவில்லை. உங்கள் கதாபாத்திரம் பற்றி திரிஷா விசாரித்தார் என்று அனுஷ்காவிடம் கூறியபோது, வேண்டுமானால், என் கதாபாத்திரத்தில் அவர் நடிக்கட்டும் என்று அனுஷ்கா விட்டுக்கொடுக்க முன்வந்தார் என்று கௌதம் மேனன் கூறியுள்ளார்.**

# விஜயகாந்துடன் ரஜினி, விஜய்



தமிழ் சினிமாவுக்கும் தமிழக அரசியலுக்கும் ஏக பொருத்தம். இதை முதலில் தொடங்கி வைத்தது அண்ணாத்துரை, கருணாநிதி, எம்.ஜி.ஆர். தான். அதன் பிறகு நீ நான் எனப் போட்டி போட்டுக்கொண்டு நடிகர், நடிகைகள் அரசியலில் குதித்தனர். இதில் விஜயகாந்த்தும் அடங்குவார். ய்ார் யாரோ அரசியலில் குதிக்கிறார்கள். ஆனால் வாறேன் என்று சொன்னவர் மட்டும் இன்னும் வரவில்லை.

சரி விசயத்துக்கு போவோம்...

விஜயகாந்த் தன்னோட மூத்த மகன் ஷண்முக பாண்டியன் நாயகனாக அறிமுகமாகிற சஹாப்தம் படத்தோட பாடல் வெளியீட்டு விழாவை சிறப்பா நடத்த முடிவெடுத்திருக்கிறார். இதுக்கு அவர் தயாரித்திருக்கிற அழைப்பாளர் பட்டியல் மிகவும் பெரியதாம்.



அதில் முக்கியமான முதல் இடத்தில் இருக்கிறவர் ரஜினிகாந்த். ரஜினி தலைமையில் விழா நடக்கிறது முடிவாகி இருக்கிறது. அவரும் சம்மதம் சொல்லிவிட்டார் என உறுதியான தகவல்கள் வந்துள்ளது.


இதில் அடுத்த இடத்தில் இருக்கிறது விஜய் தான். செந்தூரப்பாண்டி படத்தில விஜயகாந்த்துடன் விஜய் நடித்து போல், தன் மகனையும் மேல கொண்டு வரனும் என்று விஜய்க்கு அழைப்பு விடப்பட்டுள்ளதாம்.



இந்த விழா வெறும் சினிமா விழா தான். ஆனா மும்மூர்த்திகள் இப்படி விழா மேடையில் சந்தித்தால்... சும்மா இருக்குமா சங்கு... இது அரசியலுக்கான அடிக்கல் நாட்டு விழா என்கிற அளவில் அரசியல் வட்டாரத்தில் தீயைப் பற்ற வைத்துள்ளனர்.

# வர்ணம் தீட்டுங்கள்



# நீல நிறப் பனிப்பாறை

உலகில் வேறெங்கும் காண முடியாத விசித்திரமான, மர்மமான பனிப்பாறை ஒன்று அண்டார்டிகா பனிப் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

சான் பிரான்சிஸ்கோ நகரைச் சேர்ந்த அலெக்ஸ் கார்னல்(Alex Cornell) என்பவர் இயற்கை காட்சிகளைப் படம் பிடிப்பதை தொழிலாக கொண்டவர்.

இவர் சமீபத்தில் அண்டார்டிகா பிரதேசத்துக்கு பனிக்கட்டிகளையும், பனிப்பாறைகளையும் படம் பிடிக்கச் சென்றுள்ளார்.

அங்கே பரந்து விரிந்த பனிபிரதேசத்துக்கு நடுவில் செங்குத்தாக மிகப்பெரிய பனிப்பாறை ஒன்றை கண்டுபிடித்தார்.

அது வழக்கமாக காணப்படும் பனிப்பாறை போல் இல்லாமல், விசித்திரமாகவும் மர்மமாகவும் காணப்பட்டதாக கார்னல் குறிப்பிட்டுள்ளார்.

பனிப் பிரதேசங்களில் காணப்படும் பனிப் பாறைகளில் 90 சதவிகிதம் பனிப்பரப்புக்கு கீழ் தான் இருக்கும்.

ஆனால் அந்த விசித்திரமான பனிப்பாறையின் பெரும்பாலான பகுதி பனிப்பரப்புக்கு மேலேயே இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உலகில் உள்ள அனைத்துப் பனிப்பாறைகளும் வெள்ளை நிறத்தில் இருக்கும் போது, அந்த விசித்திரமான பனிப்பாறை மட்டும் நீல நிறத்தில் இருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்ததாக கூறியுள்ளார்.

பனிப்பாறைகள் அவ்வப்போது உடையும் தன்மை கொண்டதால், ஆங்காங்கே சிறு சிறு பனிக்கட்டிகள் சிதறிக் கிடக்கும். ஆனால் அந்த மர்மமான பனிப் பாறையானது நேர்த்தியாக செதுக்கியது போல், எந்த உடைந்த பாகங்கள் இல்லாமலும் பளப்பளப்பாக இருந்தது தன்னை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டு ள்ளார்.

அலெக்ஸ் கார்னலின் புகைப்படங்களை ஆராய்ந்த அறிவியல் வல்லுனர்கள் இந்த பனிப்பாறை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழமையானதாக இருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.


இந்தப்பனிப்பாறையைப் பற்றி விரிவாக ஆராய அறிவியல் வல்லுனர்கள் முயன்று வருகின்றனர்.




# சின்னச் சின்ன நாய்க்குட்டி

சின்னச் சின்ன நாய்க்குட்டி
சிங்கார நாய்க்குட்டி
வண்ண வண்ண நாய்க்குட்டி
பொன்னைப் போன்ற வண்ணமும்
பொலிவு மிக்க வதனமும்
மின்னல் போலத் துள்ளிடும்
மேனி கொண்ட நாய்க்குட்டி
காலைக் காலை சுற்றி வந்து
பாலைப்பாலைக் கேட்டிடும்
பாலைத் தட்டில் ஊற்றி வைக்க
வாலையாட்டிக் குடித்திடும்
காலை மாலை வேளையில்
காற்று வாங்கச் சென்றிடும்
காற்று வாங்கி வந்த பின்னர்
சோற்றைக் கேட்டு நின்றிடும்
நல்ல நல்ல நாய்க்குட்டி
நயமுடைய நாய்க்குட்டி
நாக்கை நாக்கை நீட்டிடும்
மூக்கை மூக்கை நக்கிடும்
கன்னத்தோடு கன்னம் வைத்துக்
கொஞ்சுமெந்தன் நாய்க்குட்டி
என்னுடைய சித்தப்பா
எனக்குத் தந்த நாய்க்குட்டி

கபிலன், அளவெட்டி.





# விடா முயற்சியும் தன்நம்பிக்கையும்

வழிப்போக்கன் ஒருவர் பாலை வனம் போன்றதோர் இடத்தை தாண்டிச் செல்ல வேண்டி இருந்தது. ஊரை சுற்றி ஒரே வறட்சி நிலவி இருந்தது. அப்போது அவருக்கு் தண்ணீர்த் தாகம் எடுக்கவே தண்ணீ ரை தேடிப் பயணம் செல்ல வேண்டி இருந்தது. அப்படியோர் வறட்சி நிலவி இருந்தது. அப்போது ஒரே ஒருவனு டைய நிலம் மட்டும் பச்சை பசேல் என்று காட்சி அளித்தது. உடனே அந்த வழிப்போக்கன் அங்கு சென்று கிணற் றில் நீர் இறைத்துக் கொண்டு இருந்த வனிடம் தண்ணீர் கேட்டு பருகினார். உடனே அந்த வழிப்போக்கன் நன்றி என்று கூறி விட்டு ஊரே வறட்சியில் இருக்கும் போது உன்னுடைய நிலம் மட்டும் இப்படி பச்சை பசேல் என்று இருக்கிறது என்றால் உனக்கு இறைவனின் கொடை அதிகம் இருக்கிறது என்று சொன்னான். உடனே அந்த விவசாயி ஐயா இந்த நிலமும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஊரை போன்று வறண்டு தான் கிடந்தது. என்னுடைய கடுமையான முயற்சியாலும் உழைப்பாலும் தான் இன்று இப்படி காட்சி அளிக்கிறது என்று பணிவாக கூறினான். மேலும் ஐயா நான் இந்த நிலத்தை பதபடுத்திய போது இந்த நிலம் மட்டும் பதப்பட வில்லை உடன் என் மனமும் பக்குவப்பட்டது நாம் ஈடு படும் காரியத்தில் மட்டும் இன்றி வாழ்விலும் வெற்றி பெறலாம் என்று அந்த வழிபோக்கனுக்கு புரிந்தது.

கோமேஸ், கரவெட்டி.

# தெரிந்து கொள்ளுங்கள்

- மிக உயர்ந்த மலை பீதுறுதாலகால மலை.
- மிக நீளமான நதி மகாவலி கங்கை.
- உயரமான நீர்வீழ்ச்சி பம்பரகந்த நீர்வீழ்ச்சி.
- இலங்கையின் சராசரி மழைவீழ்ச்சி 1905mm.
- அதிக மழை பெறும் இடம் வட்டவளை.
- குறைந்த மழை பெறும் இடம் மறிச்சுக்கட்டி.
- இலங்கையின் சராசரி வெப்பநிலை 26.7 0C.
- கூடிய வெப்பநிலை உள்ள இடம் திருகோணமலை.
- குறைந்த வெப்பநிலை உள்ள இடம் நுவரேலியா.
- இலங்கையில் தோன்றிய முதல் செய்தித்தாள் கொழும்பு ஜேர்ணல்.
- அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வரும் அதிகார பூர்வ ஏடு வர்த்தமானி.
- இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்து வெளிவரும் நூல் ஹன்ஷாட்.

கோகுலன், சாவகச்சேரி

இந்தஇரு படங்களிலும் இரு படங்களிலும் 05 வித்தியாசங்கள் உள்ளன. கண்டு பிடியுங்கள்.

# கவிதைப்புனல்



## கனிந்துள்ள காலமிதை...

சிங்களச் சகோதரனே
சிந்தித்துப் பார்
அழகிய நம் தீவில்
ஆண்டாண்டாய்
சண்டையிட்டு
நாம் கண்ட தென்ன
பல்லினமாக
பகிர்ந்தொன்றாக
வாழ்ந்திடுவோம் வா
கனிந்துள்ள
 காலமிதை இனியும் நாம்
தவறவிட்டால்...
வேண்டாம்
புகையிரதங்களால்
இணைந்திட்ட
எம் வாழ்வை
பகையில்லா
இதயங்களாலும்
இணைந்திடுவோம்
வருவாயா...

-வேல்நந்தன்,
புலோலியூர்



## பரதேசிக்குள் தேவதையவள்

ஆயிரம் பூக்கள்
பூமியில் பூக்கலாம்
அத்தனையும் உன்
சிரிப்புக்கு ஈடாகுமா?

வானத்திலே நிலவு
வந்து போகலாம்
உனது அழகுக்கு
அவை ஈடாகுமா?

கருமேகக் கூட்டங்கள்
வானத்திலே தோன்றலாம்
கூந்தலின் நிறத்துக்கு
அவை ஈடாகுமா?

அன்னங்கள் பூமியில்
அணி வகுத்து நடக்கலாம்
உன் நடை கண்டு அவை கூட
தோற்றுப் போகுமே

தெத்திப்பல் நீ காட்டி
சிரிக்கின்ற பொழுதுகளில்
தந்தியறுந்த வீணையாய்
எனக்குள்ளே முகாரிகள்

பூமியில் பிறந்த
அதிஷ்ர தேவதையை
அபகரிக்க ஆசை தான்

எனை ஏற்றுக் கொள்ளும்
மனப்பாங்கில்
அவள் உள்ளாள?
அறிய ஆவல் தான்

காரணம் அறிய
கடிதம் எழுதினேன்
குப்பைத் தொட்டிகள்
அவள் வீட்டில்
 திகரிப்பு

எனை அவள் நிராகரித்தாள்
உதடுகளால் மட்டுமல்ல
உள்ளத்தினாலும் தான்

நிராகரித்தவளை
நான் நினைத்து
நெஞ்சுக்குள்ளே
கூடு கட்டி
காதல் கோட்டை
கட்டினேன்

நான் எப்போதும்
அவளுக்கு பரதேசி
எனக்குள்ளே அவள்
எப்போதும்
என் மன தேவதை

-லே.லே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.

## என்ன செய்வேன் என் மனதை

ஒழிக்க முடிந்தால்
ஒழித்திருப்பேன்

அழிக்க முடிந்தால்
அழித்திருப்பேன்

அறுக்க முடிந்தால்
அறுத்திருப்பேன்

வெட்ட முடிந்தால்
வெட்டி இருப்பேன்

ஆனால்
என்ன செய்வேன்

உன்னையே நினைத்து
ஏங்கும் என் மனதை

உன்னைப் போலவே
ஒழிந்து விளையாடுகிறது
என்னிடம்.

-கலை,
அளவெட்டி

## புறக்கணிப்பு

உன் வார்த்தை
என்னை அவமதிக்கிறது.
உன் பார்வை
என்னை உதாசீனப்படுத்துகிறது.
உன் செயல்கள்
என்னை புறக்கணிக்கிறது.
ஐயோ!
எப்போதுமில்லாமல்
இப்போது எனக்குள்ளே
தாழ்வு மனப்பான்மை!

-நந்தன்,
உரும்பிராய்




## எனக்கு பிடித்த புத்தகம் நீ

உன்னை படிக்க படிக்க சில
பக்கங்களை புரிந்துக்கொள்ள
முடிந்தது
சில பக்கங்களை
புரிந்துக்கொள்ள
முடியவில்லை. .
புரியாத பக்கங்களை
புரிந்துக்கொள்ள முயற்சி
செய்துகொண்டிருந்தபோதே

பாதியிலேயே காணாமல்
போய்விட்டது சில பக்கங்கள். !
என் காதல் புத்தகத்தில்
பக்கங்களாக இருந்த
உன்னை தொலைத்ததால்
வாழ்வில் வெற்றிகளைவிட
தோல்விகளையே அதிகம்
சந்தித்து வருகிறேன். !

-யாரோ



(கடந்தவாரத் தொடர்ச்சி)

பல்வேறு தனிநபர்களின் கூட்டு உழைப்புகளுக்குப் பிறகுதான் இது போன்ற திரைவிழாக்கள் சாத்தியமாகின்றன என்றாலும் இந்த ஏற்பாடுகளில் உள்ள சில நடைமுறை குறைகளை மாத்திரம் பணிவாக சொல்ல விரும்புகிறேன்.

உலக சினிமா என்கிற அடையாளத்துடன் வெளிவரு கிற போலியான திரைப்படங் களை இனங்கண்டு அதை நிச்சயம் ஒதுக்கி விட வேண் டும். இத்தனை எண்ணிக்கை யிலான திரைப்படங்கள் திரையிடப்பட விருக்கின்றன என்பதில் சாதனையோ பெருமையோ ஏதுமில்லை. மாறாக சிறந்த திரைப்படங்களையே எல்லா அரங்குகளிலும் வெவ்வேறு இடைவெளிகளில் திரையிடுவதின் மூலம் இந்த இடைவெளியை நிரப்ப முடியும். பெரும்பாலான பார்வை யாளர்கள் இந்த சிறந்த திரைப்படங்களை தவற விடாமல் பார்ப்பதற்கு இந்த ஏற்பாடு உதவியாக இருக்கும். எது சிறந்த திரைப்படம், அதற்கான அளவுகோல் என்ன, யார் அதை தீர்மானிப்பது என்பதும் புறந்தள்ளி விட முடியாத கேள்விகள் தான் என்றாலும் உலக அளவில் பெரும்பான் மையாக ரசிக்கப்பட் டவை. விருதுகள் வாங்கியவை எனும் அளவுகோலை பின்பற்றலாம். உதாரணமாக ROSEVILLE என்கிற பல்கேரிய திரைப்படம் மூன்றாந்தர ஹாரர் படம் போலவே இருந்தது என்பது என் தனிப்பட்ட அபிப்ராயம். இது திரையிடப்படுவதற்கு முன் வேறு ஒரு திரைப்படம் தவறுதலாக திரையிடப்பட்டு அது ஏறத்தாழ பதினைந்து நிமிடங்கள் ஓடின பிறகே படம் மாற்றப்பட்டது.

நம்மூர் அரங்குகளின் தரமே சற்று முன்னும் பின்னுமாக இருக்கும் போது அதில் திரையிடப்படவிருக்கும் பிரிண்ட்டுகளின் தரத்தையும் பார்க்க வேண்டும். கேஸினோவில் திரையிடப்பட்ட 'Now or Never' என்கிற பிரெஞ்சு திரைப்படம், சினிமா கண்டுபிடிக்கப்பட்ட போது உருவாகின திரைப்படம் போல மங்கலாக இருந்தது.

நான்கைந்து அரங்குகள் அமைந்திருக்கும் ஒரே கட்டடத்தில் இந்த திரைவிழா நிகழ்த்தப்பட்டால், இன்னொரு அரங்குக்கு குறுகிய நேரத்துக்குள் அடித்து பிடித்து ஓட வேண்டிய தேவையின்றி அடுத்த திரைப்படத்துக்கு சற்று சாவகாசமாக செல்ல முடியும்.

'திரைப்படம் தொடங்கிய பத்து நிமிடங்களுக்குப் பிறகு அரங்கத்தின் கதவுகள் மூடப்படும்' என்று அட்டவணையில் பெயரளவில் உள்ள நிபந்தனையை கறாராக நடைமுறையாக்கலாம்.

---

இந்த திரை விழாவுக்கு வரும் பல ஆர்வமுள்ள இளைஞர்களை கவனிக்கிறேன். அவர்களின் தேடலும் ஆர்வமும் திரைப்படத்தை அணுகும் விதமும் சற்று பிரமிப்பை ஏற்படுத்தும் விதமாகத்தான் உள்ளன. ஆனால் ஒரு திரைப்படத்தை காட்சிக் கோணங்களை சிலாகிக்கும் வழியாக மாத்திரமே அணுகும் அபாரமான ஞானமுள்ளவர்களையும் பார்க்கிறேன். திரைப்படம் என்பது வெறும் நுட்பம் மட்டுமா? அவை தரும் அனுபவங்களும் அவை நம் மனதினுள் படிய வைக்கும் சிந்தனைகளும் அவற்றின் மையங்களும்தானே பிரதானமாக அணுகப்பட வேண்டியது?

இதன் ஊடே 'ஏதாவது சீன் உள்ள படமா?' என்று இன்னொரு விதமான தேடலில் [illegible] நபர்களையும் பார்க்கிறேன். 'அந்த படத்துல செம சூடாம்' என்று பரபரப்புடன் அதைப் பார்க்க முட்டி மோதுகிறார்கள். சுஜாதாவின் 'பிலிமோத்ஸவ்' என்கிற அற்புதமான சிறுகதை நினைவுக்கு வருகிறது. பாலியல் வறட்சி கொண்டிருக்கும் ஆனால் அதை பாசாங்குகளால் மூடி மறைக்கும் இந்தச் சமூகத்தில் அதன் வடிகாலாலுக்கான சில விஷயங்களை பெரிய குற்றமாக கருத முடியாதுதான். ஆனால் மூன்றாந்தர மலையாளப் படங்களே அரைகுறையான பாலியல் காட்சிகளைப் பார்ப்பதற்கான ஒரே வழி என்று இருந்திருந்த காலகட்டத்தில் வேண்டுமா[illegible] சென்சார் செய்யப்படாத படங்களின் காட்சிகளைப் பார்க்க அலைமோதுவதற்கு ஒரு நியாயமான காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் பளிங்கு போன்ற ஆபாச வீடியோக்கள் இன்று சல்லிசான விலையில் கிடைக்கும் காலக்கட்டத்திலும் அந்த மாதிரியான காட்சிகளுக்காக அயல் திரைப்படங்களை நாடுவதும் பின்பு அதிருப்தியோடு எழுந்து சென்று சக பார்வையாளர்களை இடையூறு செய்வதும் நிச்சயம் முறையானதல்ல. பாலியல் காட்சிகளைப் பார்ப்பதற்காக ஒருவன் இது [illegible] திரைவிழாக்களை நாடுவான் எனில் அது போன்ற அபத்தமானதொன்று இருக்கவே முடியாது. திரைக்கதையின் அடிப்படையில் பாலியல் காட்சிகள் கொண்ட ஒரு சிறந்த திரைப்படத்தைக் கூட 'பிட்டு படமாக' பார்க்கும் குறுகலான, முதிர்ச்சியற்ற மனப்பான்மைக்கே அந்த மனோபாவம் இட்டுச் செல்லும்.

.............................

இந்தத் திரைவிழாவில் நான் முக்கியமாக அறிந்து கொண்ட நடைமுறை அனுபவம், அரங்கத்தின் கதவு அமைந்திருக்கும் அருகிலுள்ள இருக்கைகளில் அமரக்கூடாது என்பது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த குடி தமிழ் என்றெல்லாம் அதன் தொன்மத்தை சிலாகிக்கிறோம். பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் நாகரிகம் உருவாகி விட்ட வரலாற்றுக் கதைகளை பெருமையுடன் வாசிக்கிறோம். 'வரலாறு முக்கியம் அமைச்சரே' என்கிற பாணியில் உருவான புனைவுகளா அவை என்று எண்ணத் தோன்றுகிறது. அது உண்மையெனில் அதன் தொடர்ச்சி எங்கே, எதனால் அறுந்து போனது? இன்னமும் கூட பொதுவெளியில் புழங்கத் தெரியாத, மற்றவர்களுக்கு இடையூறு செய்யத் தெரியாத, நாகரிகம் பழகாத, நுண்ணுணர்வுகள் மழுங்கிப் போன சமுதாயமாக நாம் இயங்கிக் கொண்டிருக்கிறோமா என்று கவலையாக இருக்கிறது. அதன் உதாரணங்களை இது போன்ற பொது நிகழ்வுகளில் பார்க்கிறேன்.

ஒரு திரைப்படம் எத்தனை மணிக்கு தொடங்கும் என்பது திரைவிழா பார்வையாளர்களுக்கு முன்பே அச்சிடப்பட்ட அட்டையின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எல்லோருமே அதை வைத்திருக்கிறார்கள். ஆனால் படம் தொடங்கி அரைமணி நேரம் வரை சிறிது சிறிதாக ஏறத்தாழ நூறு நபர்களாவது கதவைத் திறந்து உள்ளே நுழைந்து கொண்டேயிருக்கிறார்கள். சிலர் வெளியேறிக் கொண்டேயிருக்கிறார்கள். படம் பார்க்கும் மற்றவர்களுக்கு இடையூறு செய்கிறோமே என்கிற உணர்வு சிறிது கூட இருப்பதாக தெரியவில்லை. கைபேசியில் 'எங்க இருக்கே.. அங்க சீட் இருக்கா? என்று ஏதோ சொந்த வீட்டில் நுழைவது போல உரத்த குரலில் பேசிக் கொண்டே நுழைகிறார்கள். போக்குவரத்து உள்ளிட்ட இன்ன பிற நடைமுறைக் காரணங்களுக்காக வேறு வழியில்லாமல் தாமதமாக நுழைபவர்களை கூட புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் வெளியே தேநீர்க்கடைகளில் அரட்டை அடித்து விட்டு தாமதமாக நுழைவதை ஒரு வழக்கமாகவே வைத்திருக்கும் நபர்கள்தான் இப்படி எரிச்சலூட்டுகிறார்கள். ஒரு கலையை இத்தனை அலட்சியமாக அணுகுகிற அந்த மனோபாவம்தான் கவலையை அளிக்கிறது. இன்னும் சிலர் படத்தின் இடையிலேயே மற்றவர்களைப் பற்றி ஒரு கவலையுமின்றி உரத்த குரலில் உரையாடுகிறார்கள். நம்முடைய ஆட்சேபத்தைத் தெரிவித்தால் முறைத்து விட்டு உரையாடலைத் தொடர்கிறார்கள்.

நன்றாகக் கவனியுங்கள். நான் குறை சொல்லிப் புலம்புவது ஏதோ ரஜினி திரைப்படத்தின் முதல் நாள் வெளியீட்டில் 'ஒரே கூச்சலாக இருக்கிறதே' என்று கூட அல்ல. அந்த அளவுக்கெல்லாம் கூட நான் எதிர்பார்க்கவில்லை. நல்ல கலைப்படைப்புகளை தேடி வருகிறவர்களுக்கு சில பொது குணாதிசயங்களும் மனோபாவமும் ரசனையும் உருவாகி இருக்கும். அதில் நுகர்வதில் ஏற்படும் இடையூறுகள் ஒருவருக்கு எந்த அளவுக்கான மனத் தொந்தரவுகளை அளிக்கும் என்பதை உணர்ந்திருப்பார்கள். ஆனால் அவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டு இப்படி அநாகரிகமாக நடந்து கொள்வது எப்படி என்பதுதான் புரியவில்லை. ஒரு நிகழ்ச்சிக்கு தாமதமாக வருவதுதான் பெருமை என்பது எப்படியோ நமக்குள் படிந்திருக்கிறது. நம்முடைய குடிமையுணர்விலும் கலாசார வழக்கங்களிலும் எத்தனை பலவீனமாக இருக்கிறோம் என்பதையே இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன.

ஐரோப்பிய நாகரிகங்களை நாமும் பின்பற்ற வேண்டுமா? அவைதான் உயர்வானதா என்று விவாதித்து தங்களின் தவறுகளை நியாயப் படுத்த சிலர் முயலலாம். நல்ல பண்புகள் எந்தவொரு சமூகத்தில் இருந்தாலும் அதை நாமும் நகலெடுப்பதில் பின்பற்றுவதில் தவறில்லை. அதனால் எல்லாம் நம்முடைய அடையாளங்களை இழந்து விடுவோம் என்கிற தாழ்வுணர்வுகள் தேவை யில்லை. அவை நம் சமூகம் இன்னமும் மேன்மையை அடையவே உதவும்.

உலக சினிமாக்களைப் பார்த்து விட்டோம் என்று அசட்டுத்தனமாக வெற்றுப் பெருமையுணர்வு கொள்வதில் ஏதும் உபயோகமில்லை. அவை நம் அகத்தில் ஏற்படுத்தும் அனுபவங்களும் மாற்றங்களும்தான் முக்கியமானவை. ஒருவகையில் இது போன்ற சினிமாக்கள் உருவாக்கப்படும் நோக்கமும் இதுதான்.




> ஒரு திரைப்படம் எத்தனை மணிக்கு தொடங்கும் என்பது திரைவிழா பார்வையாளர்களுக்கு முன்பே அச்சிடப்பட்ட அட்டையின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எல்லோருமே அதை வைத்திருக்கிறார்கள். ஆனால் படம் தொடங்கி அரைமணி நேரம் வரை சிறிது சிறிதாக ஏறத்தாழ நூறு நபர்களாவது கதவைத் திறந்து உள்ளே நுழைந்து கொண்டேயிருக்கிறார்கள். சிலர் வெளியேறிக் கொண்டேயிருக்கிறார்கள்.




- சமஸ்

விபின் சௌஹானும் ஜிதேந்திர சௌஹானும் தம்பி அண்ணன்கள். தங்களுடைய தையல் கடைக்கு ஜேட் ப்ளூ என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அஹமதாபாத் ஆட்டோக்காரர்களிடம் கேட்டால், மோடியின் தையல் கடை என்று சொல்லி வழிகாட்டுவார்கள் அல்லது கொண்டுபோய்விடுவார்கள். அஹமதாபாதில் மட்டும் அல்ல. குஜராத்துக்கு வெளியே நாக்பூர், உதய்பூர், ஜெய்பூர், புணே, ஹைதராபாத் என்று எங்கெல்லாம் ஜேட் ப்ளூ கடைகள் இருக்கின்றனவோ எல்லாமே மோடியின் தையல் கடைகள்தாம். ஜேட் ப்ளூ கடைக்காரர்களே அப்படிச் சொல்லித்தான் விளம்பரப்படுத்துகிறார்கள் என்று உள்ளூர்க்காரர்கள் சொல்கிறார்கள். மோடியின் நண்பர் தொழிலதிபர் அதானியும் ஜேட் ப்ளூவின் வாடிக்கையாளர்தான்.

இரண்டு சௌஹான்களும் ஆரம்ப நாள்களில் கடைவீதியில் காஜா எடுக்கும் வேலை பார்த்திருக்கிறார்கள். எந்தத் தையல்காரர் சட்டைக்குப் பொத்தான் வைக்கக் கூப்பிடுகிறாரோ, அவருடைய கடை வாசலே அன்றைக்கு இவர்களுடைய கடை. கொஞ்சக் காலம் கழித்து, 1981இல் கொஞ்சம் துணிச்சலோடு, 250 சதுர அடியில் ஒரு இடத்தைப் பிடித்துக் கடை போட்டிருக்கிறார்கள். கடைக்கு அப்போது வைக்கப்பட்ட பெயர் சுப்ரிமோ. இதற்கு 8 வருடங்கள் கழித்து, அவர்கள் கடைக்கு நரேந்திர தாமோதர தாஸ் மோடி முதல்முறையாக வந்தார். ஆர்.எஸ்.எஸ். உறவு, முதல் முறை மோடிக்கு, வெள்ளை கதர் குர்தா தைத்துக்கொடுத்ததாகச் சொல்கிறார் விபின் சௌஹான். இன்று வரை மோடியின் குர்தாக்கள் இங்கேதான் தைக்கப்படுகின்றன. இடையில் 1995இல் கடை 3,000 சதுர அடியில் விஸ்தரிக்கப்பட்டபோது பெயர் ஜேட் ப்ளூ என்றானது. இப்போது 14,215 சதுர அடிக்கு விரிந்து கிடக்கிறது. வருட வியாபாரம் ரூ. 150 கோடி. கடையில் கிடைக்கும் ஏராளமான முன்னணி பிராண்டுகள் இடையே தங்கள் சொந்த பிராண்டுகளையும் வைத்திருக்கிறார்கள். முக்கியமான பிராண்ட் மோடி குர்தா. மோடியிடம் அனுமதி வாங்கிவிட்டுத்தான் இப்படிப் பெயர் வைத்தோம் என்கிறார்கள். பரஸ்பரம் விளம்பரம். ஒரு வருடத்துக்கு முன்பு 25,000 மோடி குர்தாக்கள் போனதாம். இனி அதை 10 மடங்கு பெருக்க வேண்டும் என்கிறார் சௌஹான். ஆரம்ப நாள்களில், வெள்ளை கதர் குர்தாவில் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக மாறி இன்றைக்கு வந்தடைந்திருக்கும் மோடியின் ஆடை வண்ணப் பயணம் முழுவதற்கும் ஜேட் ப்ளூவில் ஒவ்வொரு கதை உண்டு. ஆனால், அமெரிக்க அதிபர் ஒபாமாவின் இந்தியப் பயணத்தின்போது, மோடி அணிந்திருந்த, நரேந்திர தாமோதர தாஸ் மோடி என்று ஆடை முழுவதும் நெய்யப்பட்டிருந்த கோட்டின் ரகசியத்தை இங்கிருந்தும் பெற முடியவில்லை.

ஆடை அலங்காரத்தையே ஒரு ஆளுமைப் பிரகடனமாகக் கருதும் தலைவர்கள் உலகம் முழுவதும் உண்டு. எல்லாக் காலத்திலும். நம் காலத்தில் ஆசியத் தலைவர்களில் ஆப்கனின் ஹமீத் கர்சாய் இதில் பெரும் பேர் வாங்கியவர். பல்கேரியாவின் போய்கோ பரிஸவ் தன்னை ஒரு ஆணழகனாகவே காட்டிக் கொண்டவர். மோடியின் 56 அங்குல மார்பைவிடவும் அகன்ற மார்பு இவருடையது என்று சொல்லலாம். கராத்தேவில் கருப்புப் பட்டை வாங்கியவர் என்பதை போய்கோ பரிஸவுடைய கை குலுக்கல் சொல்லும் என்று குலுக்கியவர்கள் சொல்வது உண்டு. எகிப்துடைய முபராக்கின் ஆடை அலங்காரம் அவ்வளவு பிரசித்தம் இல்லையென்றாலும், அவரும் தன் பெயரை நெய்த கோட்டைப் போட்டுக்கொண்டதுண்டு. பெண் தலைவர்களில் லைபீரியாவின் எலென் ஜான்ஸன் சர்லீஃப் கச்சிதமாக, கம்பீரமாக உடுத்துவார் என்பார்கள்; அர்ஜென்டினாவின் கிறிஸ்டினா பெர்னாண்டஸ் கீர்சனர் அரசியலில் அழகிக்கு உதாரணம் என்பார்கள்.

எப்படிப் பார்த்தாலும் மறக்க முடியாதவர், தன்னுடைய கடைசிக் காலத்தில் மக்களால் தெருத்தெருவாக விரட்டிக் கொல்லப்பட்ட லிபியத் தலைவர் மம்மர் கடாஃபி. ஆடை அலங்காரத்தில் கடாபியை ஒரு பின்நவீனத்துவவாதி என்று தாராளமாகச் சொல்லலாம். ஒரு நாள் பழங்குடி அவதாரம் எடுப்பார். ஒரு நாள் இராணுவ அவதாரம் எடுப்பார்.

எப்படியும் இந்தப் பட்டியலில் ஒபாமாவுக்கு இடம் கிடைப்பது சிரமம்தான். திருமதி ஒபாமா சவாலான போட்டியாளர். ஆனால், டெல்லியில் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில், மோடி உடைகளை மாற்றிய வேகத்தைப் பார்த்து ஒபாமாவே கொஞ்சம் திகைத்துவிட்டதாகத்தான் சொல்கிறார்கள் ராஷ்டிரபதி பவன் சேவகர்கள். விருந்தின்போது ஒபாமாவே மோடியிடம் சொன்ன தாகவும் கேள்வி, மிஷேல் மாதிரியே நீங்களும் ஆச்சரியப்படுத்துகிறீர்கள் என்று. குடியரசு தின அணிவகுப்பில் மோடி அணிந்திருந்த ராஜஸ்தான் பந்தினி தலைப்பாகைக்குக்கூட ஒபாமா ஆசைப்பட்டதாக ஒருவர் சொன்னார்.

**மோடி உடைகளை மாற்றிய வேகத்தைப் பார்த்து ஒபாமாவே கொஞ்சம் திகைத்துவிட்டதாகத்தான் சொல்கிறார்கள் ராஷ்டிரபதி பவன் சேவகர்கள். விருந்தின்போது ஒபாமாவே மோடியிடம் சொன்ன தாகவும் கேள்வி, மிஷேல் மாதிரியே நீங்களும் ஆச்சரியப்படுத்துகிறீர்கள் என்று. குடியரசு தின அணிவகுப்பில் மோடி அணிந்திருந்த ராஜஸ்தான் பந்தினி தலைப்பாகைக்குக்கூட ஒபாமா ஆசைப்பட்டதாக ஒருவர் சொன்னார்.**

ஒரு அமெரிக்க அதிபர் முதல் முறையாக இந்தியாவின் குடியரசு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருக்கிறார்; உலகின் இரு பெரும் ஜனநாயகங்கள் தோள் மீது கை போட்டு நெருக்கமாகப் பேசுகின்றன, அருகருகே உட்கார்ந்து டீ பரிமாறிக்கொள்கின்றன; அணிசாராக் கொள்கை காலம் எல்லாம் நேருவோடு போய்விட்டது என்பதைப் பகிரங்கமாகச் சொல்லும் காலத்தில் அடியெடுத்துவைத்திருக்கிறோம்; அணுசக்தி யுகத்தின் உச்சத்தை நோக்கி நகர ஆரம்பிக்கிறோம். இதையெல்லாம் விட்டுவிட்டு இப்போது பேச இதுதான் செய்தியா? ஒரு பிரதமர் தன் விருப்பப்படி தன்னுடைய பெயரையே கோட்டில் நெய்து போட்டுக்கொள்ளக் கூடாதா? இதெல்லாம் ஒரு விவாதப் பொருளா?

இந்திய வரலாற்றில் இது மிக முக்கியமான ஒரு நகர்வுதான். ஆனால், மூன்று நாள்கள் முழுவதுமாக என்ன நடந்தது என்ற கதை உண்மையாகவே யாருக்கும் முழுக்கத் தெரியவில்லை. முக்கியமாகப் பேசப்படும் அணுசக்தி இழப்பீட்டு ஒப்பந்தம் நம்முடைய வாயில் வடையைச் செருகியிருப்பது பூடகமாகத் தெரிகிறது. விவரம் கேட்டு திக்விஜய் சிங் அறிக்கை விட்டிருக்கிறார். டி. ராஜா, மோடிக்கே கடிதம் எழுதியிருக்கிறார். சாதாரணக் குடிமக்கள் என்ன செய்ய முடியும்?

நம்முடைய பிரதமருக்குத் தெரியும், எது விவாதப் பொருளாக இருக்க வேண்டும் என்று. சும்மாவா தன் பெயரை நெய்த கோட்டைப் போடுகிறார்? அவருக்குத் தெரியும். விபின் சௌஹானிடம் ஒரு முறை மோடி சொன்னாராம், மூன்று விஷயங்களில் நான் சமரசம் செய்துகொள்ள மாட்டேன்: 1. பார்வை 2. குரல் 3. உடை.

பெரிய மனிதர்கள் காரண காரியம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார்கள்.

சவுதி மன்னர் அப்துல்லா இறந்துபோனதால், ஒபாமா தம்பதி தாஜ்மஹாலைப் பார்க்க ஆக்ரா போகவில்லை. ஒபாமா தம்பதி ஆக்ராவைப் பார்க்கப் போகும்போது, சாலைகள் சுத்தமாக இருக்க வேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் ரொம்ப மெனக்கெட்டிருந்தது. ஒரு நாளைக்கு ரூ. 300 கூலியாகக் கொடுத்து 600 பேரைச் சாலைகளைத் தினமும் கழுவிவிடச் சொல்லியிருந்தது. உத்தரப் பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ், ஒபாமா தம்பதியை வரவேற்கும் வாய்ப்பு நழுவிவிட்டதாக வருத்தம் தெரிவித்திருக்கிறார். சாலைத் தொழிலாளர்கள் அதைவிடவும் வருத்தம் அடைந்திருப்பார்கள். கிடைத்த ஓரிரு நாள் வேலையும் பாதியில் போய்விட்ட துயரம்தான்.

ஒரு சமையல்காரரின் பேரன் ஒரு நாட்டின் அதிபராவதும் ஒரு டீக்கடைக்காரரின் மகன் ஒரு நாட்டின் பிரதமராவதும் அமெரிக்காவிலும் இந்தியாவிலும்தான் சாத்தியம் என்று பேசியிருக்கிறார் ஒபாமா. கூடவே, கடைசி நாள் அன்று, பன்மைத்துவம்தான் நமது பலம். இந்தியத் துணைக் கண்டத்தில் மதரீதியாகப் பிரிவினை கூடாது. நாடு ஒற்றுமையாக இருந்தால்தான் வெற்றிகள் குவியும் என்றெல்லாம் பேசியிருக்கிறார். வெறும் சம்பிரதாயமாகத் தெரியவில்லை.

பெரிய மனிதர்கள் காரண காரியம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டார்கள்!

## இவ்வார இராசி பலன்

**04.02.2015 ~10.02.2015**

**மேஷம்**

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். உறவினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். பணச்செலவு அதிகரிக்கும். புத்திரர் அறிவார்ந்த செயலில் ஈடுபடுவர். எதிர்ப்பு அணுகாத சுமுகவாழ்வு அமைந்திடும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமளிப்பு உண்டாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் உடல்நலம் பேணுவதில் அக்கறை வேண்டும். மாணவர்கள் அதிக முயற்சியினால் தேர்ச்சி விகிதம் சீராகும்.

**ரிஷபம்**

### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

சொத்தின் மீது கடன் பெற, நம்பகமானவர்களிடம் வாங்குவது நல்லது. வீடு, வாகனத்தில் பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து நல்வழி நடத்த வேண்டும். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். பணியாளர் தம் கடமை உணர்ந்து பணிபுரிவது நற்பெயரை பாதுகாக்க உதவும். பெண்கள், குடும்பத் தேவைகளுக்கு சேமிப்பு பணத்தை செலவு செய்வீர்கள். மாணவர்கள், பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க கூடாது.

**மிதுனம்**

### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உடன் பிறந்தவர்களின் எண்ணங்களுக்கு மாறாக செயல்பட வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் ஆடம்பர செயல்களில் ஆர்வம் கொள்வர். நிலுவைப் பணம் வசூலாகும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில் வியாபாரத்தில் சில மாற்றம் செய்து முன்னேற்றத்திற்கு வழி காண்பீர்கள். பணியாளர்களுக்கு, கூடுதல் வேலைவாய்ப்பு சன்மானம் கிடைக்கும். மாணவர்கள், வெளியிடம் சுற்றுவதை குறைத்தால், படிப்பில் கவனம் வளரும்

**கடகம்**

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

வாகன பயன்பாடு சில நன்மை தரும். புத்திரரின் குழப்பமான செயல் நல்வழிகாட்டுதலால் சரிசெய்வீர்கள். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உள்ள நன்மைகளை கவனமுடன் பாதுகாப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு, பதவி பெற அனுகூலம் உண்டு. பெண்களின் பேச்சு, செயலில் சாமர்த்தியம் நிறைந்திருக்கும். மாணவர்களின் படிப்புக்கான தேவை இனிதே நிறைவேறும்.

**சிம்மம்**

### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

வார்த்தையில் நிதானம் பின்பற்றுவதால் நற்பெயருக்கு குறை வராது. வாகன பராமரிப்பு செய்தால் பயணம் இலகுவாக அமையும். புத்திரரின் செயல் குறையை கண்டிப்பதில் நிதானம் வேண்டும். வழக்கு விவகாரத்தில் சமரச தீர்வு பெற அனுகூலம் உண்டு. தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணியாளர்களின் செலவுகளுக்கு சேமிப்பு பணம் பயன்படும்.

**கன்னி**

### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

உடன் பிறந்தவர்களின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். குடும்பத் தேவைகளை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். புதிய வாகனம் வீடு வாங்க சிலருக்கு யோகம் உண்டு. எதிர்மனப்பாங்கு உள்ளவர் மறைமுகமாக உங்களிடம் உதவி பெற விரும்புவர். இல்லறத்துணையின் தாமத செயல்களை குறை சொல்ல வேண்டாம்.

**துலாம்**

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உடன்பிறந்தவர்களின் அன்பு, ஆலோசனை கிடைக்கும். உடல்நலம் ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை உங்களின் நல்ல குணம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பினால், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள், அத்தியாவசிய செலவுகளுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். பெண்கள், வாழ்வில் பெற்ற நன்மைக்காக இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். மாணவர்கள், பரிகாசம் பேசுபவரிடம் விலகுவது நல்லது.

**விருச்சிகம்**

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

போக்குவரத்தில் கவனநடை பின்பற்றவும். புத்திரரின் மனக்கவலை மாற தகுந்த ஏற்பாடு செய்வீர்கள். அளவுக்கு அதிகமாக உங்களை புகழ்ந்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. இல்லறத்துணை குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், கலை அம்சம் நிறைந்த வீட்டு அலங்கார பொருள் வாங்குவீர்கள். மாணவர்கள் உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**தனுசு**

### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

கெடுபிடிகுணம் உள்ளவர்களிடம் கடன் வாங்க வேண்டாம். முருகப்பெருமானின் நல்லருள் உறுதுணை புரியும். வாகன பராமரிப்பு பயணம் எளிதாக அமைந்திட உதவும். புத்திரர் படிப்பு, வேலையில் ஆர்வம் கொள்வர். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணை மகிழ்ச்சிகர மனதுடன் கருத்துக்களை சொல்வார். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணியாளர், நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்றவும்.

**மகரம்**

### உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்

வீடு, வாகனத்தில் நம்பகத்தன்மை இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். புத்திரர் அறிவார்ந்த செயல் புரிந்து பெற்றோர், உறவினரிடம் பாராட்டு பெறுவர். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பு சம்பள உயர்வு பெறுவர். பெண்கள், குடும்ப பணவரவுக்கேற்ப புத்தாடை, அணிகலன் வாங்குகிற யோகம் உண்டு. மாணவர்கள் படிப்பில் முன்னேற சில ஒழுங்குமுறை பின்பற்றுவது நல்லது.

**கும்பம்**

### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். உடல்நலத்திற்கு சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழிலில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்யவும். இயந்திரப்பிரிவு பணியாளர் பாதுகாப்பு நடைமுறையில் கூடுதல் கவனம் பின்பற்றவும். பெண்கள், சேமிப்பு பணத்தை குடும்ப செலவுக்கு பயன்படுத்துவர். மாணவர்கள், கூடுதல் தர தேர்ச்சி பெறுவீர்கள்.

**மீனம்**


### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

புதிய வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் வேத சாஸ்திரம் அறிவதில் ஆர்வம் கொள்வர். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். பணியாளர், தொழில்நுட்ப பயிற்சி பெற வாய்ப்பு வரும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் அன்பை பெற்று சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள், நன்றாக படித்து பாராட்டு பெறுவர்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 72

அடேல் பாலசிங்கம்



அவரைக் கதவுக்கு வெளியே அழைத்துச் சென்றதும் மறுகணம் அவர் சென்று விட்டார். ஆனால் எனது நிலை என்ன என்பது அரச கட்டளையில் கூறப்படவில்லை. ஆகவே , நாடு கடத்தல் கட்டளையில் நான் இல்லை என்று புரிந்து கொண்டேன். உடனடியாக ஒரு முச்சக்கர வண்டியில் ஏறி, பிரபாகரனுக்கும் ஏனைய போராளிகளுக்கும் அறிவிப்பதற்காக அரசியல் பணிமனைக்கு விரைந்தேன்.பயிற்சி முகாம்களில் இருந்த பிரபாகரன் உடனே தலைமறைவானார். தண்டனை நடவடிக்கை அவருக்கு எதிராகவும் எடுக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்த்ததே அதற்குக் காரணம்.

பாலாவைப் பற்றிய செய்திக்காகவும் அவர் நாடு கடத்தப்படும் நேரத்தை அறியவும் அடையாறில் உள்ள அரசியல் பணிமனையில் காத்திருந்தேன். ஒழுங்கான சட்ட முறையைக் காவற்றுறை கடைப் பிடிக்கும் என்றும், அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பது போன்ற விபரங்களை வழங்கும் என்றும் நான் பைத்தியக்காரத் தனமாக நம்பிக் காத்து நின்றேன்.இருளத் தொடங்க எனது மனக்கலவரம் அதிகரித்தது. அவர் எங்கே என்று அறிவிக் கப்படாததால், பயங்கரக் கற்பனைகளும் மனதில் தோன்றின. ஒரு விபத்து நடக்க வில்லை. கற்பனைகளும் மனதில் தோன்றின.ஒரு விபத்து நடக்க வில்லை என்றோ, அவர் கொல்லப்படவில்லை என்றோ எப்படி நம்பு வது? ஏனென்றால் நாம் சம்பந்தப்பட்ட அரசியல் அத்தகையது எனது நல்ல காலம். பாலாவிடம் அரசியல் பாடம் படித்த போராளிகள் சிலர் அரசியல் பணிமனையில் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். எனக்கு உதவ அவர்கள் தயாராக இருந்தார்கள். நம்பிக்கையான, விசுவாசமான நண்பர்கள் என்பதையும் நிருபித்தீர்கள். எம்மை எமது வீட்டில் இருந்து அரசியல் பணிமனைக்கு ஒவ்வொரு நாளும் கூட்டிச் செல்லும் குரு என்ற போராளியை வழியில் கண்டேன். அவரையும் கூட்டிக் கொண்டு மரீனா கடற்கரைக்கு முன்பாக உள்ள புலனாய்வுக் காவல் துறை ('கியூ' பிரிவுத்) தலைமைப் பணிமனைக்கு விரைந்தேன். அங்கே போய்ச் சேர்ந்த போது இருட்டி விட்டது. எனது உள் மனமும் இட்டாகவே இருந்தது. மற்றவர்களுடைய தொடர்பு துண்டிக்கப்பட்டு , தனியாக வைக்கப்பட்டிருந்த பாலாவை, எப்படி நடத்தினார்களோ என்ப்து ஒரு கவலை.ஆதை விட , வீட்டில் இருந்து போகும் போது அவர் இன்சுலின் மருந்து கொண்டு போகவில்லையே என்பது இன் னொரு கவலை. காவற்றுறைப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சென்றடைந்த போது, கொதியுடன் போனேன். பாலா எங்கே என்று அறிய வேண்டும். அவரைப் பார்க்க அனுமதி பெற வேண்டும்.

**(பதிவு தொடரும்)**

கார்த்திகாயனி சுபேஷ்

# இப்படியும்...

அவசர அவசரமாக வேலைக்குப் புறப்பட்ட சந்திர சேகரனின் நினைவில் பொறி தட்டி யது.

“ச்சா... எப்படி மறந்தன்...”

"ரயிலைப் பிடிக்கிற அவசரத்தில் மறந்திட்டன்போல..."

"என்ன அவசரமெண்டாலும் இதை மறந்திட்டுப் போகேலுமே..." ஆவலோடு என்னட்ட ஓடி வாறதுகளை வெறுங்கையோட போய் ஏமாத்த ஏலுமே..."

தன் ஞாபக மறதியைத் திட்டிக் கொண்டே வீட்டுக்குள் திரும்பிய போது... வாசலில் மனைவி அந்தச் சிறு "பாசல்" உடன் புன்னகையோடு காத்திருந்தாள்.

என்னப்பா... வயசு போக மறதியும் கூடுது போல..."

எனக்கு வயசு போகுது எண்டதில அவளுக்கொரு சந்தோசம். அதைச் சொல்லிக் காட்டுகிறாள். அவளிடம் இருந்து அவசர அவசரமாக அந்தப் "பாசலை" வாங்கிய படி விரைந்து நடந்தேன்.

புகையிரத நிலையத்தை நெருங்கியதும் புளிய மரத்தின் கீழ் அவையள் இரண்டு பேரையும் தேடினேன். அவையளைக் காணேல்லை.

எங்க போயிருப்பினம் எண்ட சிந்தனையோடு நடந்து வந்த என் கால்களை பின்னால் இருவரும் சுரண்டினர். இருவரின் தலைகளையும் மெல்லத் தடவிக் கொடுத்தேன்.

மரத்தின் கீழே கொண்டு சென்ற "பாசலை" அவிழ்த்து வைத்தேன்.

புட்டுடன் சேர்த்துக் குழைத்த பழைய மீன் குழம்பு வாசனை மூக்கைத் துளைத்தது. அவையள் இரண்டும் நன்றியோடு அவரைப் பார்த்து விட்டு சாப்பிடத் தொடங்கி விட்டன.

அவையிரண்டும் சந்தோஷத்துடன் வாலைப் பின்னுடலுடன் சேர்த்து ஆட்டி, ஆட்டிச் சாப்பிடும் அழகை நின்று நிதானமாக ரசிக்க முடியாமல் கைக்கடிகாரத்தைப் பார்த்தார் சந்திரசேகர். நேரம் எட்டு மணியைக் காட்ட கூவிய படி புகை வண்டி வளைவில் திரும்பிக் கொண்டிருந்தது.

"என்னண்ணை இண்டைக்கு கொஞ்சம் நேரமாகிட்டுது போல..." என்ற பக்கத்திலிருந்த கடைக்காரர் கேட்ட கேள்விக்கு அவசரமாக பதில் சொல்லிய படி வந்து நின்ற ரயிலில் ஏறிக் கொண்டார் சந்திர சேகர். யன்னலோர இருக்கையில் இருந்தபடி யன்னலூடாக அந்த நாய்களைப் பார்த்தார்.

கொஞ்சத்தைத் தான் சாப்பிட்டு விட்டு மீதியைத் தன் சோடியை சாப்பிட விட்டிட்டு அருகில் பார்த்துக் கொண்டிருந் தது அந்த ஆண் நாய்.

புகைவண்டி புறப்பட ஆயத்தமானது.

சாப்பிட்டு முடித்த இரு நாய்களும் யன்னலூடாக இவரைப் பார்த்து வாலாட்டிய படி ஓடி வந்தன... ரயில் வேகெமடுக் கவும் அதன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவை நின்றபடி வாலாட்ட யன்னலால் கையை நீட்டி ஆட்டிக் காட்டி விட்டு இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டார் சந்திரசேகரர்.

இந்த ரயில் நிலையத்துக்கு எத்தனை பேர் வருகிறார்கள் போகிறார்கள். ஆனால் சந்திரசேகரரோடு மட்டும் அவை மிக நெருக்கம்.

குட்டியாக இருக்கும் போதே அவற் றை யாரோ அங்கு கொண்டு வந்து விட்டார்கள். பால் குடிகளாக உணவில்லாமல் அங்கும் இங்கும் அல்லாடித் திரிந்து கொண்டிருந்த குட்டிகளுக்கு வீட்டில் இருந்து பால் கொண்டு வந்து வைத்தார். அவை சிறிது வளர்ந்ததும் வீட்டிலிருந்து சாப் பாடு கொண்டு வந்து வைப்பார் அல் லது பக்கத்திலிருந்த கடையில் ஏதா வது வாங்கி வைப்பார்.

இவரின் இந்தச் செயலைப் பரிகாசம் செய்யாதவர்களில்லை.

"எத்தனை சனம் ஒரு நேரச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கிடக்குதுகள்... அவர் இந்த தெரு நாயை ஊட்டி ஊட்டி வளர்க்கிறார்... அந்தச் சாப்பாட்டை இல்லாத எளியதுகளுக்கு கொடுத்தாலும் புண்ணியமாகப் போகும்."

இப்படிச் சொல்லுபவர்கள் எவரும் அந்த நன்றியுள்ள மிருகத்துக்கு கிஞ்சித்தும் கிள்ளிப் போடாத கஞ்சத்தனத்தார் தான்.

மனைவி கூட ஆரம்பத்தில் வேடிக்கையாகப் பேசினாலும் அவரின் குண இயல்பு அறிந்ததால் அவளும் விருப்புடனேயே அவையளுக்கு சாப்பாடு கொடுத்தனுப்புவாள்.

மாலையில் வீடு வந்ததும் அவைகளின் செய்கைகள் பற்றி அவர் ஆவலோடு மனைவியிடம் கூறுவார். அவளும் ஆவலோடு கேட்டு ரசிப் பாள்.

வீட்டில் நாய்,பூனை வளர்க்க வீட்டு உரிமையாளர் தடை போட்டு விட்டார். பிள்ளைகள் ,பேரப்பிள்ளைகள் இருந் தாலும் பொழுது போக கொஞ்சி விளை யாடலாம். அதற்கும் வழியில்லை. அதனால் இந்த இரு நாய்களுமே இவர்களுக்குக் குழந்தையாகிப் போனதில் ஆச்சரியமுமில்லை.

வேலைக்குப் போகாத நாள்களில் கூட அங்கு போய் அவற்றுக்குச் சாப்பாடு வைத்து விட் டுத் தான் வருவார். ஒ நாளேனும் அவற்றைப் பார்க்கா விட்டால் அவருக்குத் தூக்கமே வராது.

அவை மட்டும் காட்டும் அன்பில் என்ன குறைச்சல்?பெற்ற பிள்ளைகள் கூட இத்தனை அன்பு காட்டுவார்களா ? தம் காலில் நிற்க வெளிக்கிட்டதும் பெற்றவர்களைத் தள்ளி வைத்து விடுவார்களே.

தனக்கும் பேர் சொல்ல ஒரு பிள்ளை இல்லை என்ற குறை அவரிடம் இருந்தாலும் பிள்ளைகளைப் பெற்ற வர்கள் படும் பாட்டைப் பார்த்துத் தன் மனதை அவர் தேற்றிக் கொண்டி ருந் தார்.

அறுபது 'வயதைத் தாண்டினாலும் எந்தக் குறையுமின்றித் தான் இருப்பதற்கு அவையும் ஒரு காரணமாக இருக் குமோ எனவும் அடிக்கடி அவர் நினைப் பதுண்டு.

இப்போது அவருக்கு எல்லாம் அந்த நாய்கள் தான். மாலையிலும் இப்படித் தான். அவர் பயணித்த ரயில் மெல்ல மெல்ல நிலையத்தை நெருங்கும் போது சோடியாக நின்றபடி ஒவ்வொரு யன்னலாக அவற்றின் கண்கள் இவரைத் தேடும். கண்டு விட்டால் பின்னுடம் பாட வாலையாட்டித் தன் சந்தோஷத்தைத் தெரிவிக்கும். இறங்கியதும் ஓடி வந்து அவர் மேல் பாய்ந்து. கால்களை நக்கி ஆர்ப்பாட்ட மாக இரண் டும் தம் அன்பைப் பகிர்ந்து கொள் ளும். புதியவர்கள் அவரை ஓர் ஆச்சரியத்துடன் பார்த்து விட்டுப் போவார்கள். பழையவர்கள் புன்னகையுடன் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள்.

பக்கத்தில் உள்ள கடையில் பணிஸ் சோ, பிஸ்கட்டோ ஏதாவது வாங்கி அவற்று க்குப் போட்டுவிட்டு அவற்றுடன் சிறிது நேரம் பொழுதைக் கழித்து விட்டுத் தான் வீட்டுக்குப் போவார்.

அந்த நாய்களிடம் அவருக்குப் பிடித்ததே அவற்றுக்கிடையேயான அந்த அன்பு தான். எந்த நேரமும் ஒன்றாகவே தூங்கும். ஒன்றாகவே உண்ணும். ஆனால் அந்தப் பெண் நாய்க்காக ஆண் நாய் அதிகமாகவே விட்டுக் கொடுப்பதையும் அவர் அவதானித்தி ருக் கிறார்.

.அன்றும் வழமை போல வேலை முடித்து வந்து ரயிலில் இருந்து இறங்கினார் சந்திர சேகரர். வழமையாக வரவேற்கும் அந்தக் காதல் ஜோடியைக் காணவில்லை.

தண்டவாளத்தின் மறுகரையில் சந்தோஷமாக அவை விளையாடிக் கொண்டிருந்தன. அவரையும் அறியாமல் நிம்மதிப் பெருமூச் சொன்று வந்தது. அவரைக் கண்ட தும் பெண் நாய் துள்ளிக் குதித்து ஓடி வந்தது. மறுபக் கத் தில் ரயில் ஒன்று நெருங்கி வந்து கொண்டி ருந் தது. அதையும் பொருட்படுத்தாமல் அந்தப் பெண் நாய் ஓடிவருவதைப் பார்த்து அவர் பதறிப் போனார்.

"கடவுளே. ரயிலில் அடிபடப்போகிறதே!"

நல்ல வேளை. ஒரு நொடியில் தப்பி விட்டது என்று ஆறுதல் படும்முன் எதிர்பாராமல் மற்றொரு அசம்பாவிதமும் நடந்து விட்டது.

பெண் நாய் ஓடி வருவதைக் கண்ட ஆண் நாய் ரயில் நெருங்கி வருவதையும் கவனிக்காமல் அதன் பின்னே ஓடி வந்திருக்கிறது. பெண் நாய் தப்பி விட ஆண் நாய் ரயிலின் சில்லுகளில் சிக்குண்டு விட்டது.

ஒரு வேளை பெண் நாய் ரயிலில் அடிபடப் போவதை உணர்ந்து அதைக் காப்பாற்ற அதன் பின்னே ஓடி வந்ததோ என்னவோ?

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த சம்பவத்தால் அப்படியே உறைந்து விட்டார் சந்திர சேகரர். ரயில் போய் முடிந்ததும் அந்த நாய் கிடந்த கோலம்... "ஐயகோ!" நாயின் தலையுடன் பாதி உடல் தண்டவாளத்தினுள்ளேயும் வெளியேயும் துண்டாடப்பட்டுக் கிடந்த கோலத்தை அவர் பார்க்க முடியாமல் தவிர்த்தார்.

இவர் தான் இப்படி என்றால் அந்தப் பெண் நாய்பட்ட பாடு. அதனருகே ஓடிச் சென்று அதன் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து குளறியது. அதன் முகத்தைத் தன் நாவினால் நக்கி, கால்களால் தட்டி அதனை எழுப்ப முயற் சித் தது. கையறு நிலையில் என்ன செய்வது எனத் தெரியாமல் அங்குமிங்குமாக ஓடி ஓடி உளையிட்டழுதது.

மண்ணைத் தன் கால்களால் பலம் கொண்ட மட்டும் விறாண்டி விறாண்டி வானம் பார்த்துக் குளறியது.

இந்தக் காட்சியைப் பார்த்து உருகாத நெஞ்சங்களே அங்கிருக்கவில்லை.

கையில் புத்தகங்களுடன் நின்ற இளந்தாரி வட்டங்களில் ஒன்று... எல்லாருக்கும் இது தாண்டா கதி... இந்த நாய்க்கு நடந்தது நாளைக்கு உனக்கும் நடக்கலாமடா... கவனம்! உன்ரை ஆளோட கொஞ்சம் பாத்து நடந்து கொள்" என்று தன் சக கூட்டாளியின் தோளில் தட்டிச் சொல்லிக் கொண்டு போனது.

அந்தப் பெண் நாய்படும் பாட்டைக் சந்திரசேகரரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

சிலையாக நின்றவர் மெல்ல மெல்ல உணர்வு பெற்றார்.


அந்த நாயின் அருகே சென்ற ஒருவர் தண்டவாளத்தில் கிடந்த நாயின் உடலை அப்புறப்படுத்த எத்தனித்தார்.

ஆனால் , அந்தப் பெண் நாய் வெறி பிடித்தது போல அவர் மேல் பாய முற்பட்டது. அவர் விலகி நின்றார்.

நெஞ்சைக் கல்லாக்கியபடி மெல்ல அதன் அருகே சென்றார் சந்திரசேகரர்.


அவரைக் கண்டதும் அந்தப் பெண் நாய் அவரை நெருங்கி வந்தது.

அருகில் நின்றவர்கள் " கிட்டப் போக வேண்டாம்" என அவரை தடுத்திழுத்தார்கள். அவர் அதனைப் பொருட்படுத்தாது நாயை நெருங்கினார். அது அவரின் நீளக் காற்சட்டையை வாயினால் பிடித்திழுத்து இறந்த நாயின் அருகே கொண்டு சென்று விட்டது. அவரைப் பார்த்து ஊளையிட்டு அழுதது.



சிறுகதை.

# ஜோகோவிச் சம்பியன்




அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் ஆடவர் ஒற்றைய பிரிவில், அண்டி முர்ரேவை வீழ்த்தி, நோவாக் ஜோகோவிச் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்து முடிந்த ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச், ஸ்காட்லாந்தின் அண்டி முர்ரேவுடன் கடுமையாக மோதினார்.

இந்தப்போட்டியில், ஜோகோவிச் 7-6, 6-7, 6-3, 6-0 என்ற செற் கணக்கில் முர்ரேவை வீழ்த்தி, அவுஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் பட்டத்தை 5 ஆவது முறையாக கைப்பற்றினார்.

ஜோகோவிச்சுக்கு முதல் செற்றில் கடும் நெருக்கடி தந்த முர்ரே இரண்டாவது செற்றை அசத்தலாக கைப்பற்றினார். எனினும், அடுத்தடுத்த செற்களில் ஜோகோவிச்சின் சாதுர்யமான ஆட்டமே ஆதிக்கம் செலுத்தியது.

இதேவேளை மகளிர் ஒற்றையர் இறுதி போட்டியில், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை 6-3 7-6(5) என்ற நேர் செற்களில் எளிதாக வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ்.

# விடைபெற்றார் பிராவோ



மேற்கிந்திய அணியின் சகலதுறை வீரர் டுவைன் பிராவோ. இவர் 40 டெஸ்ட் (2200 ரன்கள்), 164 ஒரு நாள் (2968), 53 ருவென்டி20 (936) போட்டிகளில் விளையாடி உள்ளார். மேற்கிந்திய கிரிக்கெட் சபை அறிவித்த புதிய சம்பள ஒப்பந்தத்தை வீரர்கள் ஏற்க மறுத்தனர். கடந்த ஆண்டு இந்தியத் தொடரை பாதியில் ரத்து செய்து எதிர்ப்பை தெரிவித்தனர். இதற்கு முக்கிய காரணமாக இருந்த டுவைன் பிராவோ, பொலார்ட்டுக்கு உலகக்கிண்ண அணியில் இடம் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், டெஸ்ட் போட்டியிலிருந்து பிராவோ திடீரென ஓய்வை அறிவித்துள்ளார்.

இது குறித்து பிராவோ கூறியது:

டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுகிறேன். இதை, மேற்கிந்திய கிரிக்கெட் சபைக்கு தெரிவித்து விட்டேன். டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்ற போது மகிழ்ச்சி அடைந்தேன். தோல்வியின் வலியையும் உணர்ந்தேன். இந்த நினைவுகள் என்றும் என்னுடன் இருக்கும். ஒரு நாள், ருவென்டி20 போட்டியில் தொடர்ந்து பங்கேற்பேன்.

-இவ்வாறு பிராவோ கூறினார்.

# எங்களுக்குக் கிடைக்காது



உலகின் சிறந்த உதைபந்து வீரருக்கான விருது, எங்களைப் போன்ற கோல் கீப்பர்களுக்கு கிடைப்பது சிரமம், என மானுவல் நாயர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச உதைபந்து கூட்டமைப்பு (பிபா) சார்பில், ஒவ்வொரு ஆண்டும் சிறந்த உதைபந்து வீரருக்கான விருது வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருது இறுதிப் பட்டியலில் போர்த்துக்கல் வீரர் ரொனால்டோ, ஆர்ஜென்டினாவின் மெஸ்சி, உலகக்கிண்ணம் வென்ற ஜெர்மனி அணி கோல்கீப்பர் மானுவல் நாயர் என, 3 பேர் இடம் பெற்றனர்.

இதில் ரொனால்டோ முதலிடம் (37.66 சதவீதம்) பெற்று விருதை தட்டிச் சென்றார். மெஸ்சி (15.76), நாயர் (15.72) அடுத்த இரு இடங்களைப் பெற்றனர்.

இதுகுறித்து நாயர் வேதனையுடன் கூறியது:

சிறந்த விருதைப் பெற, முன்கள வீரர்களுடன் கோல் கீப்பர்கள் போட்டியிட முடியாது. ஏனெனில், உதைபந்து என்று வரும் போது, எத்தனை கோல் அடித்தீர்கள் என்று தான் கேட்பர். கோல்கீப்பர் எப்படி செயல்பட்டார் என்பதை யாரும் கண்டு கொள்வது கிடையாது. இந்த நிலை மாறும் என்று எதிர்பார்க்கவில்லை. திறமையாக விளையாடும் பட்சத்தில் ஏதாவது ஒரு வகையில் விருது கிடைக்கும். இதன் அடிப்படையில் தான் பிபா 2014 உலக லெவன் அணியின் கோல்கீப்பராக தேர்வு செய்யப்பட்டேன்.

இவ்வாறு நாயர் கூறினார்.

# களத்தடுப்புக்கு கைப் ——



உலகக் கிண்ணக் கிரிக்கெட் வரலாற்றில், களத்தடுப்பில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு மவுசு அதிகம். இந்திய அணியை எடுத்துக் கொண்டால் முகமது கைப் மின்னல் வேக' களத்தடுப்பாளராக ஜொலித்தார்.

கடந்த 2003ல் நடந்த உலகக்கிண்ண சுப்பர்-6' போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. முதலில் துடுப்பாடிய இந்திய அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 292 ரன்கள் எடுத்தது.

அடுத்து களமிறங்கிய இலங்கை அணியின் விக்கெட்டுகள் மடமடவென சரிந்தன. இதற்கு கைப் முக்கிய காரணம். இவரது துடிப்பான களத்தடுப்பில் சிக்கிய இலங்கை வீரர்கள் விரைவில் வெளியேறினர். ஸ்ரீநாத் பந்துவீச்சில் அட்டபட்டு, ஜெயசூர்யா கொடுத்த கட்ச்' வாய்ப்பை அப்படியே லபக்' செய்தார். பின் நிசங்கா, முரளிதரன் அடித்த பந்தையும் சுப்பராக' பிடித்தார்.

இலங்கை அணி 109 ரன்களுக்கு சுருண்டது. இந்தியா 183 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. நான்கு விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமான கைப், உலக கோப்பை வரலாற்றில், ஒரே போட்டியில் அதிக கட்ச்(4) செய்து சாதனை படைத்தார்.

# பெண்களை கவர்வது எப்படி?



வங்கக்கடலின் ஆழமென்ன? வானத்தின் நீளமென்ன? அனைத்தையும் கணக்கிட்டு விடலாம். ஆனால் இந்த பெண்களின் மனதை மட்டும்தான் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது என நமது கவிஞர்கள் கவிதை கவிதையாக எழுதி வைத்துள்ளார்கள்.

ஆண்கள் எதையும் வெளிப்படையாக பேசிவிடுகிறார்கள். ஆனால் பெண்களால் எதையும் பேச விடாமல் வைத்துள்ள நமது சமூகத்தினால்த்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பவர்களும் உள்ளனர். எது எப்படியோ, தினம்தினம் பெண்களின் மனங்களில் என்ன உள்ளதென தெரியாமல் ஆயிரக்கணக் கானவர்கள் அலைந்து கொண்டுதான் உள்ளனர். என்னதான் வித்தை காட்டினாலும் பெண்களைக் கவர முடியவில்லையே என்று தவித்துக் கொண்டிருக் கிறார்கள்.

இதற்கெல்லாம் மூன்றாம்பிறை கமல் மாதிரி வித்தை காட்டிக் கொண்டிருக்க தேவையில்லை. தமது அனுபவங்களை இங்கு தந்துள்ளார்கள் அனுவசாலிகள். பெண்களை கவர்வதில் அனுபவ சாலி கள் தந்த ஆலோசனைகளை படித்து பாருங்கள்.

## பாதுகாப்பு உணர்வு

பெண்கள் விரும்புவது பாதுகாப்பு உணர்வைதான், தந்தை, கணவர், மகன், என எந்த ஆணாக இருந்தாலும் தனக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். அதேபோல தோள் சாயும் போது தோழனாகவும், மடி சாயும் போது தாயுமானவனாகவும் இருக் தம் ஆண்களுக்கு மட்டுமே பெண்களின் மனதில் இடமுண்டு.

## தோற்றத்தில் மாற்றம்

பெணகளை சந்திக்கும் போது தோற்றத்தில் கவனம் தேவை. முதன் முதலில் உங்களைப் பற்றிய ஒரு எண் ணத்தை உருவாக்குவது அந்த தோற்றந்தான். பெண்களின் மனதைக் கவர "ஸ்மார்ட் லுக்" அவசியம் என்கின்றனர் அனுபவசாலிகள். அதற்காக மிகைப்படுத்தப்பட்ட அலங்கா ரமோ, செயல்பாடுகளோ தேவை யில்லை. சுத்தமாக இருங்கள். அத்தகைய ஆண்களைத்தான் பெண்க ளுக்கு மிகவும் பிடிக்கும்.

## தணத்தால் கவருங்கள்

பணமும், விலை உயர்ந்த பரிசுப் பொருள்களும் கொடுத்தால் பெண்களை எளிதில் கவர்ந்து விடலாம் என்று அநேக ஆண்கள் தவறாக கணக்கு போடுகின்றனர். நீங்கள் பணத்தினால் பெண்களை கவர முயலும் பட்சத்தில் உங்களை விட உங்கள் பணத்தின் மீது தான் பெண் களின் கவனம் இருக்கும். ஆகவே உண்மையான புத்திசாலித் தனத்தை பயன்படுத்தி பெண்களின் அபிப்பிராயத்தை பெற முயற்சி செய் வதே சிறந்த வழி.

## அடிக்கடி விசாரியுங்களேன்

எப்பொழுதாவது பேசுவதைவிட அடிக்கடி விசாரியுங்கள். தனிப்பட்ட முறையிலோ, குடும்ப ரீதியாகவோ பேச்சு இருக்கட்டும். அடிக்கடி அவர்களுக்காக நேரத்தை செலவிடுங்கள். பெண்களுக்கு உணர்வு ரீதியான செயல்பாடுகள் பிடிக்கும். அதை சரியாகப் புரிந்து கொண்டு செயல்படும் ஆண்களுக்கு பெண்களின் மனதில் எப்போதும் இடமுண்டு.

## சரியாக கணியுங்கள்

நாம் விரும்பும் பெண்ணுக்கு என்ன பிடிக்கும்? என்ன பிடிக்காது என்று சரியாகக் கணியுங்கள். இதை சரியாக தெரிந்து வைத்துக்கொண்டால் சொதப் பல்கள் இருக்காது. பிடித்த உணவு, பிடித்த நிறம், பிடித்தவைகளை சரியாக செய்தால் பிடிக்காதவைகள் ஏதாவது ஒரு சில செய்ய நேரிட்டாலும் அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது.

## கவனியுங்களேன்

ஆண்கள் கவனிக்கவேண்டும் என்பதற்காகவே நடை, உடை, பாவனைகளை தினம் தினம் புதிது புதிதாக் மாற்றிக் கொள்கின்றனர் பெண் கள். அதை சரியாக கவனித்து அவர்களை பாராட்டுங்களேன். இந்த உடை உங்களுக்கு சரியா இருக்கு. இந்த ஹேர் ஸ்டைல் உன்னோட அழகை அதிகரிக்கிறது என்று சும்மா சொல்லி வையுங்களேன். அதற்காகவே கூடுத லாக அலங்கரித்துக் கொண்டு வருகிறார்கள் என்றால் அவரின் மனதில் நீங்கள் இடம் பிடித்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

## ஜென்டில்மேன் பேச்சு

எதையும் வெளிப்படையாக பேசுங்கள். மனதில் கல்மிஷம் இல்லாத பேச்சும், கண்களுக்கு நேராக அதை தெரிவிக்கும் லாவகமும் கொண்ட ஆண்களை அதிகம் பிடிக்கிறதாம். எப்பொழுதும் ஜென்டில் மேன் செயல்பாடுகளுடன் நடந்து கொள்ளும் ஆண்களால்தான் எளிதில் பெண்களின் இதயத்தை கவரமுடியும் என்கின்றனர் நிபுணர்கள்.

## சுயத்தை இழக்காதீர்கள்

பெண்களைக் கவருவதற்காக எத்தனையோ ஆண்கள் தங்களின் சுயத்தை இழந்து அநேக வேடங்களை போடுகின்றனர். ஆனால் இந்த நடிப்பினை பெண்கள் எளிதில் இனம் கண்டு கொள்வதால் அநேக ஆண்களின் முயற்சி தோல்வியி லேயே முடிகிறது. உண்மையாக இருந்தால் மட்டுமே பெண்களை எளிதில் கவரமுடியும் என்கின்றனர் நிபுணர்கள்.

பெண்களை கவர வேண்டும் என்பதற்காக எதையும் மிகைப்படுத்தி பேசாதீர்கள். நிறைய படித்து விசய ஞானத்தோடு பேசுங்கள். உலக நடப்புகளை அப்டேட் செய்து கொள்ளுங்கள். இதுபோன்ற செயல்பாடுகளால் மட்டுமே பெண்களின் மனதை கவர முடியும் என்கின்றனர் நிபுணர்கள்

## பெண்கள்

குடிகார  
கண வனின்  
உளறலில்  
வாழ்கையை  
புரிந்து கொள்ள  
முடியாமல்  
தள்ளாடும்  
பெண்கள்  
சந்தேக  
கணவனின்  
கேள்விக்கு  
பதில் தேடி  
வாழ்கையை  
தொலைக்கும்  
பெண்கள்  
சில முடிச்சுக்களை  
போட்டு  
பல விபரீத  
முடிவுகளை  
தருவதுதான்  
திருமணமோ

## மத்தாப்பு மின்னல்கள்

நீ இந்துவோ  
இல்லை கிறிஸ்தவ்மோ  
எனக்குத் தெரியாது  
உனது உதட்டுச் சிரிப்புக்காக  
வீதியோரம்  
காத்திருந்தேன்

வெள்ளாடைச் சிட்டுக்களாக  
பல உள்ளங்கள்  
விரைந்தாலும்  
நீ வந்து  
சென்ற பின்பே  
மத்தப்பு  
மின்னல்கள்

அழகியலொடு  
உலாவரும்  
கோயிலுக்கு  
ஆயிரம் அபிடேகம்  
மனதாலே

உனை பார்த்த பின்பு  
கனவு காண்பது  
எனக்கு ரொம்ப  
பிடிக்கும்

கனவுகளோ நியாயமானால்  
சொர்க்கம் என்பது  
பூலோகமே

# நான் ஒரு நாடகக்காரன்

- யதார்தன்

நாடக உலகத்துடன் எனக்கிருக்கும் நீண்ட கால அனுபவங்களை எழுதவேண்டும் என்ற எண்ணம் வெகுநாள்களாகவே உண்டு. அவ்வப்போது நண்பர் வெங்கட்டும் எழுது என்று தூண்டிக் கொண்டேயிருந்தார். இப்போதுதான் அதற்கான நேரம் வாய்த்திருக்கிறது.

ஆனாலும் சற்றுத் தயக்கமாகத்தான் இருக்கிறது.

நான் அப்படியொன்றும் தொடர்ந்து எழுதுபவனில்லை. சரி, அவ்வப்போது நேரமும் மனமும் வாய்க்கும்போதெல் லாம் எழுதுவோம் என்று வைத்துக் கொண்டாலும் நாடகம் பற்றி நாம் எழுதுவதை எத்தனை பேர் படிப்பார்கள் என்ற எண்ணம் சற்று முட்டுக்கட்டைதான் போடுகிறது.

நானே எனது சிறுவயதில், சின்னமனூர் ஜக்காமுக்குவில் அமைந்திருந்த அரசு பொதுநூலகத்தில் பார்த்திருக்கிறேன் நாடகப் புத்தகங்கள் யாராலும் தீண்டப்படாமல் பத்திரமாக அப்படியே இருப்பதை. நாடகப் புத்தகங்களின் எண்ணிக்கையும் ஒரு தட்டுக்குள் அடங்கிவிடும் அளவிலேயே இருக்கும். அவையும் புத்தம் புதியவையாகவே இருக்கும்.

எனவே, ஒரு விஷயத்தில் தெளிவாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன். நாடகம் பற்றி எழுதினால் படிப்பவர்கள் குறைவு. எனவே, முடிந்த அளவுக்கு அவர்களை கஷ்டப்படுத்தாமல் எளிமையான முறையில் எழுத வேண்டும். சரிதானே?

சரியென ஒருவாறு தயாராகி எழுத ஆரம்பிக்கும்போதுதான் அடுத்த பிரச்சினை ஆரம்பித்தது. எங்கே ஆரம்பிப்பது? எட்டு வயதில் நான் இயக்கிய முதல் நாடகத்திலிருந்தா? அல்லது, அதற்கு முன்பாகவே எங்கள் வயதையொத்தவர்கள் கில்லியும் கோலியும் விளையாடிக் கொண்டிருந்த போது, நாங்கள் நாடகம் போட்டு விளையாடிய காலத்திலிருந்தா? அப்படியே எழுதினாலும், நிகழ்வுகளின் கால வரிசைக்கிரமத்தில் எழுதுவதா? அல்லது, எழுதும் அந்தச் சமயத்தில் என்ன தோன்றுகிறதோ அதை எழுதுவதா?

யோசித்துப் பார்த்ததில், காலக் கிரமப்படி எழுதினால், எழுதும் எனக்கே அலுப்புத் தட்டும் அபாயம் இருப்பதால், அந்த யோசனையை நிராகரித்துவிட்டேன். எழுதும் சமயம் எண்ணம் கொடுக்கும் நிகழ்வை எழுதுவது எனத் தீர்மானித்துவிட்டேன்.

முதன்முதலில் எழுதவேண்டியது நான் தில்லியில் இருந்தபோது தில்லியில் அப்போது தீவிரமாக இயங்கி வந்த யதார்த்தா எனும் தமிழ் நாடகக் குழுவுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு பற்றித்தான். ஏனென்றால், நாடகம் பற்றிய எனது கருத்துருவாக்கங்களை முற்றிலும் மாற்றியமைத்து, உண்மையான நாடகத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தது யதார்த்தாவும், யதார்த்தா கே.பென்னேஸ்வரனும்தான்.

சரி, ஒருவாறாக எழுத நான் தயா ராகிவிட்டேன். படிக்க நீங்கள் தயாரா?

**உடல்**

இளஞ்சேரனாகிய நான் தில்லி யதார்த்தா நாடகக்குழுவில் இணைந்ததன் பின்னணியில் ஒரு இசைக்குழு இருக்கிறது. அது அப்போது டெல்லியில் தமிழ் மெல்லிசைக் கச்சேரிகள் நடத்திக் கொண்டிருந்த SILVER STREAK. உடனே, நான் ஒரு இசைக் கலைஞனா என்று வீணாக வினா எழுப்பி என் இசைத் திறமையை தட்டியெழுப்பிவிடலாம் என்று தப்புக் கணக்குப் போடாதீர்கள்.

ஏனென்றால், கதை வேறு.

SILVER STREAK இசைக் குழுவின் தாள வாத்தியக் கலைஞர் யதார்த்தா பென்னேஸ்வரன். அவரை ஒரு நாடகாசிரியராகவும், நாடக இயக்குநராகவும், பத்திரிகையாசிரியராகவும் மட்டுமே அறிந்தவர்களுக்கு அவர் தப்லா வாத்தியம் வாசிப்பதில் தேர்ந்த கலைஞர். (யதார்த்தாவின் நாடகங்களுக்கும் அவரே தாள வாத்தியக் கருவிகளைக் கையாளுவாா கருவிகளென்ன பெரும்பாலான நாடகங்களில் நாங்கள் பயன்படுத்திய ஒரே இசைக் கருவி பறை மட்டுமே).

அந்த இசைக் குழுவின் ஒரு பாடகர் வித்யாசங்கர், எனது சக ஊழியர். AM. ராஜா மற்றும் P.B. ஸ்ரீனிவாஸ் ஆகியோரது குரலில் பாடுவார். PBSல் அவ்வப்போது சறுக்கி விழுந்தாலும் AM ராஜாவை அநாயசமாகக் கையாளுவார். PBS மற்றும் AM ராஜா இருவருக்கும் ஒரே மாதிரியான குரல்கள் என்றாலும் PBSன் குரலில் ஒரு நெகிழ்வு இருக்கும். அந்த நெகிழ்வை தனது குரலில் கொண்டுவர முயற்சிக்கும்போது, சற்று தாளம் தப்பவிட்டு மேடையில் KPக்கும் அவருக்குமிடையில் சிறிய அளவிலான போரே நடக்கும்.

வித்யாசங்கர் ஒருநாள் என்னிடம் சொன்னார் உங்களுக்கு நாடகம் என் றால் நிறையப் பிடிக்கும்தானே? இன் னைக்கு சாயந்திரம் ஆர்.கே.புரத்துல ஒரு நாடகம் இருக்கு: பென்னேஸ்வரன் என்று எங்க குழுவில தப்லா வாசிப்பார். அவர்தான் நாடகம் போடுவார். அவருடைய நாடகம் ஒன்று ஏற்கெனவே பாத்திருக்கிறன். சிம்பிளா இருக்கும். ரொம்ப நல்லாயிருக்கும். வித்தியாசமாக இருக்கும். சந்தோசமாக இருக்கும்.

இப்படியாகத்தான் நான் முதன்முதலில் யதார்த்தாவின் நாடகம் பார்த்தேன். ஆர்.கே.புரம் நான்காவது செக்டார் தமிழ் கல்விக் கழகப் பள்ளி. மாலை 4 மணி. ஒரு சிறிய மைதானத்தில் நாற்பது ஐம்பது நாற்காலிகள் போட்டிருந்தார்கள்.. முன்னால் இடம் காலியாக இருந்தது. இங்கே எப்படி நாடகம் போடுவார்கள் ஒரு மேடையில்லாமல்? என்ற கேள்வி எனக்குள் ஓட, நண்பரிடம் அதை கேட்கவும் செய்தேன். இங்கதான் போடுவாங்கள் என்று காலியாக இருந்த இடத்தைக் காட்டினார். தரைலயா? ஆமா. எனக்கு பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

நாடகம் தொடங்கியது. சுந்தர ராமசாமியின் உடல் என்று அறிவித்தார்கள். ஒப்பனை ஏதுமின்றி கைலி, வேட்டி, பனியன் என சாதாரண உடைகளில் பாத்திரங்கள் வலம் வந்தார்கள். யாரும் நடிக்க மெனக்கெடவில்லை. மொத்தம் ஐந்து கதாபாத்திரங்கள். இரண்டு லோக்கல் பொறுக்கிகள், இரண்டு சாமியார்கள் மற்றும் ஒருவர் வெண்போர்வையை தலைமுதல் கால்வரை போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். இவ்வளவுதான் பாத்திரங்கள். நாடகம் ஒரு பத்தே நிமிடத்தில் முடிந்து விட்டது . போலத்தான் இருந்தது. ஆனால், 40 நிமிடங்கள் ஓடியிருந்தன.

'உடல்' நாடகத்திலிருந்து

ஆனாலும் மேடையில்லாமல், கலர்கலரான லைட் இல்லாமல், ஒரு மேக்கப்கூட இல்லாமல், தரையில் நடத்தப்பட்ட இதை ஒரு நாடகமென ஒத்துக் கொள்ள என் மனம் சம்மதிக்கவில்லை. அப்ப எனக்கு வீதி நாடகம், முற்றவெளி நாடகம் பத்தியெல்லாம் எதுவும் தெரிஞ்சிருக்கல. எனக்குத் தெரிஞ்சதெல்லாம் மேடை நாடகங்கள்தான். அதுவும் நான் பார்த்தது நடித்தது எல்லாம் எங்கள் ஊரின் அமெச்சூர் நாடகக் குழுவான குறிஞ்சி நாடக மன்றத்தின் நாடகங்கள்தான்.

வித்யாசங்கர் நான் வேணும்னா உங்களை அறிமுகப்படுத்திவிடவா? நீங்களும் நடிக்கலாமே! என்றபோது, மனதில் குழப்பம்தான் நிலவியது. அவருக்கு விடை கொடுக்காமல் மழுப்பலாக ஏதோ சொல்லி சமாளித்தேன். எளிமையாக நடந்த அந்த நிகழ்வை நாடகமென்றே என் மனம் ஒப்புக்கொள்ள முடியாதபோது, நான் எப்படி அதில் பங்காற்றமுடியும்?

ஆனாலும் விரைவிலேயே யதார்த்தாவின் ஒரு அங்கத்தினன் ஆனேன்.

யதார்த்தா நிகழ்த்திய உடல் நாடகத்தை என்னால் நாடகமென்று ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும், அந்த நாடகம் தந்த அனுபவம் என்னை தொந்தரவு செய்து கொண்டே இருந்தது.

அதுவரை நான் அறிந்து வைத்திருந்த நாடக மரபுகளை அது குப்பைத் தொட்டியில் தூக்கிக் கடாசி விட்டது போல் உணர்ந்தேன். உண்மையும் அப்படித்தான்.

நானறிந்த நாடக மரபுப்படி, வசனம் பேசுபவர் மைக் அருகில் வந்து பேச வேண்டும். பேச ஆரம்பிக்கும்போது கதாபாத்திரத்தைப் பார்த்துப் பேச ஆரம்பித்து, பின் பார்வையாளர் பக்கம் திரும்பிப் பேசவேண்டும். திரும்பும்போது முதுகைக் காட்டிக் கொண்டு திரும்பக் கூடாது என்று பல மரபுகள் எனக்குள் ஊறிப் போயிருந்தன. இவைகளெல்லாம் சேர்ந்து ஒரு இருபரிமாண அனுபவத்தையே பார்வையாளனுக்குத் தரும் - திரைப்படங்கள் போல. நாடகப் பிரதியும் கிட்டத்தட்ட ஒரு திரைப்படத்தின் பிரதி போலவேதான் இருக்கும். சிறுசிறு காட்சிகளின் தொகுப்பில் ஒரு நேர்கோட்டிலான கதை. திரைப்படத்தின் ஏழ்மையான வடிவமாகவே நாடகம் உணர்வுக்குள் ஊறிப் போயிருந்தது.



**(அடுத்தவாரம் காத்திருங்கள்)**


Panasonic
நீங்கள் தேர்ந்து எடுக்கும் பெற்றரி
Sure ஆனதா?
ஜப்பான் தொழில்நுட்பத்துடன் நீண்டகாலம் அதிக சக்தியுடன் கூடிய பெற்றரி
Alkaline AAA
Alkaline AA
Alkaline C
Alkaline 9V
NEO AAA
NEO AA
NEO C
NEO 9V
Manganese AA
HI-TOP D
HI-TOP 9V
ரூ.35 தொடக்கம்
ரிச்சார்ஜபிள் பெற்றரி
eneloop AAA
eneloop AA
lite AAA
lite AA
Pro AAA
Pro AA
3க்கு 1 இலவசம்
3 பெனசோனிக் பென்டோர்ச் பெற்றரிகளை வாங்கி ஒன்றை இலவசமாக பெறுங்கள்
பெனசோனிக் பெற்றரி
முற்றிலும் Sure
கலேரியா, சகல சொப்ட்லொஜிக் மெக்ஸ், சொப்ட்லொஜிக் காட்சியறைகள், நாடு பூராகவும் உள்ள, அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், சுப்பர் மார்கட்கள் மற்றும் சில்லறை வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்களின் சகல பெனசோனிக் பெற்றரி தேவைப்பாடுகளுக்கும் அழையுங்கள் - 075 902 7028, 077 734 5760, 077 385 0481
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்
Hotline 011 5 705 705
softlogic


Hero
ஸ்ப்ளெண்டர் ஐ ஸ்மார்ட் ஒரு மிடுக்கான தெரிவு
i3s Technology
splendor
iSmart
It's Smart Thinking
STOPS STARTS SAVES
GREEN EFFICIENCY
5 வருட WARRANTY
*Warranty for a period of 5 years or 70,000 kms from the date of purchase, whichever is earlier. Conditions apply.
வசதியான பவர் ஸ்டார்ட்
கவர்ச்சிகரமான வடிவமைப்பு
சிறந்த எரிபொருள் சிக்கனத்துடன் கூடிய APDV என்ஜின்
கறுப்பு எலோய் வீல்
i3s
ரூ. 194,990
*நிபந்தனைகளுக்குட்பட்டது.
☎: 011 5777000
மேலதிக ஸ்மார்ட் விபரங்களுக்கு அருகிலுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans













இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 பெப்ரவரி 04ஆம் திகதி வெளியிடப்பட்டது.